துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

கிரிக்கெட் தமிழ் மாத இதழ்

மார்ச் - 2026 (28 வது இதழ்)

வாகை சூடியவர்கள்

துடுப்பாட்டம் மாத இதழ்

மார்ச் 2026

இன்னிங்ஸ் 4 **ஓவர் 2**

வடிவமைப்புக் குழு

S. பழனி செல்வகுமார் ***கா. இராமச்சந்திரன்***

கார்த்திகேயன் ***ஞா. மிக்கேல்ராஜ்***

வணக்கம், அன்புடையீர்!

சென்னை எம்ஏ சிதம்பரம் மைதானம் மறுசீரமைப்பு முடிந்து உலகக்கோப்பைப் போட்டிகள் நடந்தன. பொதுவாக சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான சென்னை ஆடுகளம் இப்போது பேட்டர்களுக்கு சாதகமான களமாக மாறியுள்ளது ஆரோக்கியமான விசயமல்ல. உலகக்கோப்பையில் அதிக ரன்கள் குவிக்கப்பட்டது சென்னையில் தான். 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நிகழ்த்தப்பட்ட வெற்றியும் சென்னையில். அமெரிக்காவின் ஹர்மீட் சிங், ஆப்கானிஸ்தானின் முகமது நபி மட்டுமே சொல்லும்படியாக பந்துவீசிய சுழற்பந்துவீச்சாளர்கள்.

சென்னை மைதானத்தை நம்பி சுழற்பந்துவீச்சாளர்களை அணியில் வைத்திருக்கும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி எப்படி ஆடப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அட்டைப்பட வடிவமைப்பு - ராம் குமார்

நன்றி : படங்கள் - இணையதளம்

தரவுகள் - ESPNCricinfo மற்றும் ICC இணையதளம்

தொடர்புக்கு வாட்சப் - +91 80566 09320

Thuduppattam7@gmail.com

X - @thuduppattam

Thuduppattam.blogspot.com

உள்ளே

1	சிக்ஸர் பதில்கள்	5
2	அட்டைப்படக் கட்டுரை	8
3	மகளிர் போட்டி முடிவுகள்	12
4	12த் மேன்	15
5	சிறந்த போட்டி - [ஞா. மிக்கேல்ராஜ்]	16
6	உலகக்கோப்பை ஹைலைட்ஸ் - 1	20
7	மாதம் ஒரு மங்கை	27
8	மார்ச் மாதப் போட்டிகள்	29
9	ஐஎஸ்பிஎல்	30
10	ரைசிங் ஸ்டார்ஸ் ஆசியக் கோப்பை	33
11	மூவேந்தர்கள்	36
12	சாதனைத்துளிகள்	38
13	வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை (மகளிர்)	39
14	இலங்கை - இங்கிலாந்து	41
15	உலகக்கோப்பை ஹைலைட்ஸ் -2	44
16	மறக்க முடியாத போட்டி - [சு. பழனி செல்வகுமார்]	51
17	புத்தகக் கிரிக்கெட்	53
18	இம்பாக்ட் ப்ளேயர்	54
19	ஒடோம்மோ டி20	56
20	உலகக்கோப்பையில் சிறிய அணிகள்	57
21	ஆஸ்திரேலியா - இந்தியா (மகளிர்)	59
22	கேப்டன்களும் காயங்களும்	62

உள்ளே

23	பிப்ரவரி போட்டி முடிவுகள்	64
24	மகளிர் உலகக்கோப்பைத் தகுதிச்சுற்று	71
25	மைல்கல்லை எட்டியவர்கள்	73
26	உலகக்கோப்பை சூப்பர் 8	79
27	கிரிக்கெட் சர்ச்சை	83
28	லெஜென்டஸ் புரோ 20	84
29	தென்னாப்பிரிக்கா - பாகிஸ்தான் (மகளிர்)	87
30	இளையோர் உலகக்கோப்பை	88
31	மகளிர் பிரீமியர் லீக்	95
32	கடைசிப்பக்கம்	100

சிக்ஸர் பதில்கள்

விக்கெட் கீப்பர் ஒரு கையில் பந்தை வைத்துக்கொண்டு மற்றொரு கையால் ஸ்டம்பில் தட்டினால் அவுட்டா?

(சந்திரக்குமார், ஆறுமுகநேரி)

விதி 29.2.1.5ன் படி விக்கெட் கீப்பர் தனது கையிலோ அல்லது கையுறையிலோ பந்தை வைத்து ரன் அவுட் / ஸ்டம்பிங் செய்தால் அது ஏற்புடையது. அதேசமயம் வேறு கையில் பந்தை வைத்து இருந்தால் அது ஏற்புடையது அல்ல. பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா தொடரில் கவாஜா நபே வேறு கையில் வைத்து ஸ்டம்பிங் செய்தது உங்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கலாம். ஆனால் அது அம்பயரின் தவறால் கொடுக்கப்பட்ட அவுட்.

நோபாலில் எடுக்கப்படும் ரன்கள் உதிரியில் சேர்க்கப்படுமா? அல்லது பேட்ஸ்மேன்களுக்கு வழங்கப்படுமா?

(சேவியர், தொழுதூர்)

ஒரு பந்துவீச்சாளர் நோபால் வீசினால், அந்தப் பந்துக்கு ஒரு ரன் உதிரியாக வழங்கப்படும். பேட்ஸ்மேன் அடித்து எடுக்கும் ரன்கள் பேட்ஸ்மேன்களுக்கு வழங்கப்படும். பந்துவீச்சாளர் வீசிய கணக்கில் அந்தப் பந்து சேர்த்துக்கொள்ளப்படாது. ஆனால் பேட்ஸ்மேன் எதிர்கொண்ட பந்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

இந்திய அணிக்கு ஆடிய அப்பா - மகன்கள் யார் யார்?

(ரமேஷ் குமார், சாயல்குடி)

இந்திய அணிக்காக விளையாடிய அப்பா மற்றும் மகன் வீரர்கள்.

லாலா அமர்நாத், அவரது மகன்கள் மொகந்தீர் அமர்நாத் & சுரிந்தர் அமர்நாத்.

நவாப் பட்டோடி (இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு ஆடியவர்) மற்றும் மன்சூர் அலிகான் பட்டோடி.

ஹேமந்த் கனிட்கர் மற்றும் ரிஷிகேஷ் கனிட்கர்.

தத்தா கெய்க்வாட் மற்றும் அனுஷ்மன் கெய்க்வாட்.

விஜய் மஞ்சரேக்கர் மற்றும் சஞ்சய் மஞ்சரேக்கர்.

ரோஜர் பின்னி மற்றும் ஸ்டுவர்ட் பின்னி.

பங்கஜ் ராய் மற்றும் பிரணாப் ராய்.

சையது வாஸிர் அலி மற்றும் காலித் வாஸிர் (இவர் பாகிஸ்தான் அணிக்காக ஆடினார்).

ஜஹாங்கிர் கான் மற்றும் மஜித் கான் (இவர் பாகிஸ்தான் அணிக்காக விளையாடியவர். இவரது மகன் பஸித் கானும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்).

யோக்ராஜ் சிங் மற்றும் யுவராஜ் சிங்.

சுனில் கவாஸ்கர் மற்றும் ரோகன் கவாஸ்கர் (ரோகன் டெஸ்ட் போட்டிகளில் ஆடியதில்லை).

இதுவரை எத்தனை பேர் விக்கெட்கீப்பர் கேப்டனாக இருந்துள்ளனர்?

(சந்தோஷ் நாராயணன், முகலிவாக்கம்)

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 35 பேர் விக்கெட்கீப்பர் கேப்டனாக இருந்துள்ளனர். இதில் 9 பேர் ஒருபோட்டியில் மட்டுமே கேப்டனாக இருந்துள்ளனர். அதிக போட்டிகளில் கேப்டனாக இருந்தவர்கள் தோனி - 60, முஸ்பிகூர் ரஹீம் - 28, டிம் பெய்ன் - 23

ஒருநாள் போட்டிகளில் இதுவரை 47 பேர் விக்கெட்கீப்பர் கேப்டனாக இருந்துள்ளனர். இதில் 8 பேர் ஒரு போட்டியில் மட்டுமே கேப்டனாக இருந்துள்ளனர். அதிக போட்டிகளில் கேப்டனாக இருந்தவர்கள் தோனி - 200, சர்ப்ராஸ் அகமது – 50, ஸ்காட் எட்வர்ட்ஸ் – 49.

சர்வதேச டி20 போட்டிகளில் இதுவரை 93 பேர் விக்கெட்கீப்பர் கேப்டனாக இருந்துள்ளனர். இதில் 15 பேர் ஒரு போட்டியில் மட்டுமே கேப்டனாக இருந்துள்ளனர். அதிக போட்டிகளில் கேப்டனாக இருந்தவர்கள் தோனி - 72, ஸ்காட் எட்வர்ட்ஸ் - 50, ஜாஸ் பட்லர் – 39.

****

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

நியூசிலாந்து கேப்டன் சான்ட்னருக்கு சென்னையில் சாப்பிட்ட பர்கரால் வயிற்றுக்கோளாறு ஏற்பட்டது. இதனால் அவரால் கனடாவுக்கு எதிரான போட்டியில் ஆட முடியவில்லை. மிட்செல் சாண்ட்னர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக சில ஆண்டுகள் ஆடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அட்டைப்படக் கட்டுரை

கடந்த அக்டோபரில் தொடங்கிய ரஞ்சிக்கோப்பைத் தொடர் பிப்ரவரியில் முடிவடைந்தது. ஜம்மு காஷ்மீர் அணி முதன்முறையாக வென்று வரலாறு படைத்தது.

இந்தத் தொடரின் ஏ பிரிவில் ஜார்க்கண்ட், ஆந்திரப்பிரதேசம், விதர்பா, பரோடா, உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, ஒடிசா & நாகலாந்து அணிகளும்,

பி பிரிவில் மத்தியப்பிரதேசம், கர்நாடகா, சௌராஷ்டிரா, மஹாராஷ்டிரா, கேரளம், கோவா, பஞ்சாப் & சண்டிகர் அணிகளும்,

சி பிரிவில் பெங்கால், உத்தர்கண்ட், ஹரியானா, ரயில்வேஸ், சர்வீசஸ், குஜராத், திரிபுரா & அஸ்ஸாம் அணிகளும்,

டி பிரிவில் மும்பை, ஜம்மு காஷ்மீர், சட்டிஸ்கர், ஹைதராபாத், ராஜஸ்தான், பாண்டிச்சேரி, டெல்லி & இமாச்சலப் பிரதேசம் அணிகளும் இடம் பெற்றன.

பிளேட் பிரிவில் மணிப்பூர், பீகார், மேகாலயா, சிக்கிம், மிஸோரம், அருணாச்சல் பிரதேசம் அணிகளும் இடம் பெற்றன.

காலிறுதியில் உத்தர்கண்ட் அணி ஜார்க்கண்ட் அணியை வென்றது. ஜம்மு காஷ்மீர் அணி மத்தியப்பிரதேச அணியை வென்றது. ஆந்திரப்பிரதேச அணி பெங்கால் அணியை வென்றது. கர்நாடகா அணி மும்பை அணியை வென்றது.

கர்நாடகா - உத்தர்கண்ட் மோதிய அரையிறுதிப் போட்டியில் கர்நாடகா முதல் இன்னிங்ஸில் 736 ரன்களைக் குவித்தது. கேப்டன் தேவ்தூத் படிக்கல் 232 ரன்கள் அடித்தார். ரவிச்சந்திரன் சமரன் (135 & 127) இரண்டு இன்னிங்ஸிலும் சதமடித்தார். கர்நாடகா முதல் இன்னிங்ஸ் முன்னிலை மூலம் வென்றது.

பெங்கால் - ஜம்மு காஷ்மீர் மோதிய அரையிறுதிப்போட்டியில் முதல் இன்னிங்ஸில் 328 ரன்கள் எடுத்த பெங்கால் அணி 2வது இன்னிங்ஸில் 99 ரன்களுக்கு ஆட்டம் இழக்க ஜம்மு காஷ்மீர் வென்றது. முதல் இன்னிங்ஸில் பெங்கால் அணியின் முகமது ஷமி 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இறுதிப் போட்டி, பிப்ரவரி 24-28, ஹூப்பளி

ஜம்மு காஷ்மீர் - 584

சுபம் பண்டிர் - 121

பிரசித் கிருஷ்ணா - 5/98

கர்நாடகா - 293

மயங்க் அகர்வால் - 160

அஃபூப் நபி - 5/54

ஜம்மு காஷ்மீர் - 342/4 டிக்ளேர்

கமரான் இக்பால் - 160*

ஷகில் லோட்ர - 101*

பிரசித் கிருஷ்ணா - 2/42

ஜம்மு காஷ்மீர் முதல் இன்னிங்ஸ் முன்னிலை மூலம் வென்றது.

வெற்றிபெற்ற ஜம்மு காஷ்மீர் அணியின் கேப்டன் பாரஸ் தோப்ரா, 153 முதல்தரப் போட்டிகளில் ஆடியுள்ளார். ஹிமாச்சலப்பிரதேசத்தில் பிறந்த இவர், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் புதுச்சேரி அணிகளுக்கும் ஆடியுள்ளார். ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் வாரியம் சிறந்த வீரர்களை உருவாக்கித் தந்தது, அதுதான் வெற்றிக்குக் காரணம் எனக் கூறியுள்ளார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற சுபம் பண்டிர் கூறியது“ பெருமைமிகு தருணம். ரன் குவிப்பது முக்கியமல்ல, நிலைத்து நின்று ஆட வேண்டும் என்பது தான் எனது திட்டம். எதிர் முனையில் அப்துல் சமாத் மற்றும் யாவேர் ஹசன் நல்ல பங்களிப்பைத் தந்தார்கள்”.

60 விக்கெட்டுகளை வீழ்த்தித் தொடர்நாயகன் விருது பெற்ற அஃயூப் நபி கூறியது. “முதல் முறையாக வென்றுள்ளோம். கடின உழைப்பால் தான் இது சாத்தியம் ஆனது. ஒவ்வொரு போட்டியிலும் எனது முழுத்திறனையும் வெளிப்படுத்தி ஆடினேன்”.

ஜம்மு காஷ்மீர் அணிக்காக அதிக ரன்கள் குவித்த வீரர் **அப்துல் சமாத்** - 748 ரன்கள்.

<u>அதிக ரன்கள் அடித்த வீரர்கள்</u>

ரவிச்சந்திரன் சமரன் (கர்நாடகா) - 950

ஆயுஷ் டோஸேஜா (டெல்லி) - 949

சனத் சங்க்வான் (டெல்லி) - 828

சுதிப்குமார் கிராமி (பெங்கால்) – 797

அபினவ் தெஜ்ரானா (கோவா) - 788

அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள்

அஃயூப் நபி (ஜம்மு காஷ்மீர்) - 60

மயங்க் மிஸ்ரா (உத்தர்கண்ட்) - 59

ஸ்ரேயாஸ் கோபால் (கர்நாடகா) - 48

சித்தார்த் தேசாய் (குஜராத்) - 45

ஷாபாஸ் அகமது (பெங்கால்) – 39

*****

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

பாகிஸ்தான் அணியில் நிறைய சுழற்பந்துவீச்சாளர்கள் இருந்ததால் பாகிஸ்தான் கேப்டன் சல்மான் அகா பந்துவீசவில்லை. ஆனால் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் முதல் ஓவரையே வீசினார். அந்த ஓவரில் அபிஷேக் சர்மாவை அவுட்டாக்கினார். வேறு எந்தப் போட்டியிலும் சல்மான் பந்துவீசவில்லை.

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

டி20 உலகக்கோப்பை தகுதிச்சுற்று, பிப்ரவரி 01, கீர்த்திபுர்

அயர்லாந்து - 121/8	**தாய்லாந்து - 59**

அயர்லாந்து 62 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அர்லீன் கெல்லி - 4/7

டி20 உலகக்கோப்பை தகுதிச்சுற்று, பிப்ரவரி 01, முல்பனி

நெதர்லாந்து - 102/6	**பங்களாதேஷ் - 105/3**

பங்களாதேஷ் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - நாஹிதா அஃதெர் - 3/10

டி20 உலகக்கோப்பை தகுதிச்சுற்று, பிப்ரவரி 01, கீர்த்திபுர்

ஸ்காட்லாந்து - 178/8	**அமெரிக்கா - 137**

ஸ்காட்லாந்து 41 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - டேர்சி கார்டர் - 52

தென் ஆப்பிரிக்கா - பாகிஸ்தான் முதல் டி20, பிப்ரவரி 10, போட்செஃப்சிற்றூம்

பாகிஸ்தான் -180/9	**தென் ஆப்பிரிக்கா - 185/5**

தென் ஆப்பிரிக்கா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - கைலா ரெயினேகே - 2/13 & 29*

தென் ஆப்பிரிக்கா - பாகிஸ்தான் 2வது டி20, பிப்ரவரி 13, பெனோனி

பாகிஸ்தான் -100/9 (14)	**தென் ஆப்பிரிக்கா - 104/4**

தென் ஆப்பிரிக்கா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அயபோங்க காகா - 3/10

ஆஸ்திரேலியா - இந்தியா முதல் டி20, பிப்ரவரி 15, சிட்னி

ஆஸ்திரேலியா -133/1	**இந்தியா -50/1**

இந்தியா 21 ரன்கள்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அருந்ததி ரெட்டி - 4/22

தென் ஆப்பிரிக்கா - பாகிஸ்தான் 3வது டி20, பிப்ரவரி 16, பெனோனி

பாகிஸ்தான் -144/7	**தென் ஆப்பிரிக்கா - 91**

பாகிஸ்தான் 53 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பாத்திமா சனா - 47* & 2/12

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

ஆஸ்திரேலியா - இந்தியா 2வது டி20, பிப்ரவரி 19, கான்பெர்ரா

ஆஸ்திரேலியா -163/5	**இந்தியா - 144/9**

ஆஸ்திரேலியா 19 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஜார்ஜியா வோல் - 88

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை முதல் ஒருநாள், பிப்ரவரி 20, கிரெனடா

இலங்கை - 240/6	**வெஸ்ட் இண்டீஸ் - 230**

இலங்கை 10 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இனோகா ரணவீர - 4/44

ஆஸ்திரேலியா - இந்தியா 3வது டி20, பிப்ரவரி 21, அடிலெய்டு

இந்தியா - 176/6	**ஆஸ்திரேலியா -159/6**

இந்தியா 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஸ்மிருதி மந்தனா - 82

தென் ஆப்பிரிக்கா - பாகிஸ்தான் முதல் ஒருநாள், பிப்ரவரி 22, ப்ளூம்ஃபோன்டைன்

தென் ஆப்பிரிக்கா - 260/6	**பாகிஸ்தான் -223**

தென் ஆப்பிரிக்கா 37 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - சன்னே லூஸ் - 93* & 2/31

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை 2வது ஒருநாள், பிப்ரவரி 22, கிரெனடா

இலங்கை - 208	**வெஸ்ட் இண்டீஸ் - 194**

இலங்கை 14 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - விஷ்மி குணரத்னே - 58

ஆஸ்திரேலியா - இந்தியா முதல் ஒருநாள், பிப்ரவரி 24, பிரிஸ்பேன்

இந்தியா - 214	**ஆஸ்திரேலியா -217/4**

ஆஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - பெத் மூனி - 76

நியூஸிலாந்து - ஜிம்பாப்வே முதல் டி20, பிப்ரவரி 25, ஹாமில்டன்

நியூஸிலாந்து - 202/1	**ஜிம்பாப்வே -110/4**

நியூஸிலாந்து 92 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அமெலியா கெர் - 101* & 2/14

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

தென் ஆப்பிரிக்கா - பாகிஸ்தான் 2வது ஒருநாள், பிப்ரவரி 25, செஞ்சூரியன்

தென் ஆப்பிரிக்கா - 361/8	**பாகிஸ்தான் - 345**

தென் ஆப்பிரிக்கா 16 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - அன்னெறி டெர்க்சன் - 90, 3/59 & 2 கேட்ச்கள்

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை 3வது ஒருநாள், பிப்ரவரி 25, கிரெனடா

இலங்கை - 217/7	**வெஸ்ட் இண்டீஸ் - 218/4**

வெஸ்ட் இண்டீஸ் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஹய்லே மாத்தியூஸ் - 100 & 2/33

நியூஸிலாந்து - ஜிம்பாப்வே 2வது டி20, பிப்ரவரி 27, ஹாமில்டன்

நியூஸிலாந்து - 196/1	**ஜிம்பாப்வே -86**

நியூஸிலாந்து 110 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - இஸபெல்லா காஸி - 85*

ஆஸ்திரேலியா - இந்தியா 2வது ஒருநாள், பிப்ரவரி 27, ஹோபர்ட்

இந்தியா - 251/9	**ஆஸ்திரேலியா - 252/5**

ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகி - ஜார்ஜியா வுல் - 101

வெஸ்ட் இண்டீஸ் - இலங்கை முதல் டி20,, பிப்ரவரி 28, கிரெனடா

வெஸ்ட் இண்டீஸ் - 49	**இலங்கை - 7/0**

முடிவு இல்லை

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

அகமதாபாத் மைதானத்தில் நெதர்லாந்து அணி இடதுகை பேட்டரை வலைப்பயிற்சி செய்ய அழைத்தது. காரணம் இந்திய அணியில் நிறைய இடதுகை பேட்டர்கள் இருந்ததால், தங்களது அணியில் டாப் ஆர்டர் இடதுகை பேட்டர்கள் இல்லாததால். குஜராத் அணியின் கேப்டன் மனன் கிஞ்கிரஜியா வலைப்பயிற்சியில் நெதர்லாந்து அணியுடன் ஈடுபட்டார். அதுவும் கடைசி நிமிடத்தில் இவர் அழைக்கப்பட்டார். பொதுவாக வலைப்பயிற்சிக்கு உள்ளூர் பந்துவீச்சாளர்களைக் கூப்பிடுவதே வழக்கம்.

12த் மேன்

தமிழ் கிரிக்கெட் வர்ணனை மூலம் கிரிக்கெட் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவரைத் தெரியுமா? அவர்தான் எஸ். எம். அப்துல் ஜப்பார். ரேடியோ வர்ணனையில் தனது தனித்துவமான தமிழ் மற்றும் நகைச்சுவை கலந்த பேச்சின் மூலம் ஈர்த்தவர் ஜப்பார்.

ஜப்பார் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் பிறந்தவர். சிறிதுகாலம் இலங்கையில் இருந்தவர். இலங்கையில் தான் இவருக்கு ரேடியோ கேட்கும் பழக்கம் வந்தது. இந்தியா திரும்பியபிறகு, கிரிக்கெட் போட்டி குறித்து அகில இந்திய வானொலி நிலையத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தால் ஈர்க்கப்பட்ட அகில இந்திய வானொலி, அவரைக் கிரிக்கெட் வர்ணனைக்குத் தேர்வுசெய்தது. 1979 முதல் 2004 வரை அகில இந்திய வானொலி வர்ணனைக் குழுவில் இருந்தவர். பின்னர் சன் டிவி, நியோ ஸ்போர்ட்ஸ், இஎஸ்பிஎன், பிபிசி தமிழ் மற்றும் ஜீ டிவியில் பணியாற்றினார்.

ஜப்பார் சில புத்தகங்களும் எழுதியுள்ளார். தனது 81 வயதில் 2020ல் காலமானார் அப்துல் ஜப்பார். “துடுப்பாட்டம்” என்ற சொல்லை முதன்முறையாகப் பயன்படுத்தியவர் அப்துல் ஜப்பார் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

****

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

பாகிஸ்தான் அணியின் துவக்க வீரர் ஷாகிப்ஸடா பர்ஹான், நமீபியா மற்றும் இலங்கைக்கு எதிரான போட்டிகளில் சதமடித்தார். ஒரே டி20 உலகக்கோப்பைத் தொடரில் இரண்டு சதங்கள் அடித்த முதல் வீரர் ஷாகிப்ஸடா பர்ஹான்.

2026 டி20 உலகக்கோப்பையில் ஒரு சிறந்த ஆட்டம்

- ஞா. மிக்கேல்ராஜ்

போட்டியைப் பாக்கிற நமக்கே இவ்ளோ இதயத்துடிப்பு எகிறுதே, மைதானத்துல விளையாடுற ஆட்டக்காரங்களுக்கு எப்படி இருக்கும் அந்த நிலைமையில? இதுதான் மறுபடியும் மறுபடியும் தோணுச்சு அந்த தென்னாப்பிரிக்கா - ஆஃப்கானிஸ்தான் ஆட்டம் நடந்தப்போ.

பிப்ரவரி 11 அன்னைக்கு நடந்த மேட்சில, மொதல்ல பேட்டிங் பண்ணுன தென்னாப்பிரிக்க அணியில் எல்லாருமே (மார்க்ரம் மற்றும் ஸ்டப்ஸ் தவிர) ஓரளவுக்கு நல்லாவே ஆடி 187 ஸ்கோர் பண்ணாங்க. சேஸ் பண்ணுன ஆஃப்கானிஸ்தான் பேட்ஸ்மேன்களும் நல்லா ஸ்கோர் பண்ணுனாலும் விக்கெட்டுங்க விழுந்துட்டே இருந்ததால ஆட்டம் மதில்மேல பூனையா தான் போச்சு.

கடைசி ஓவர்ல வெற்றிக்கு 13 ரன்கள் தேவை ஆஃப்கானிஸ்தான்-க்கு. அவங்களுக்கு இருந்தது கடைசி விக்கெட். அனுபவம் வாய்ந்த ரபடா இந்த மாதிரி சிச்சுவேசன்ல பந்துபோட வந்தா பொதுவா நமக்குத் தோணும் மேட்ச்

முடிஞ்சிரும் மொத பந்துலயேனு. ஆனா எடுத்ததும் நோபால் அப்புறம் அகலப்பந்துனு ஆரம்பிச்சி அடுத்த பந்துல நூர் அகமது சிக்ஸ் அடிச்சதும் அப்படியே ஆஃப்கானிஸ்தான் பக்கம் மேட்ச் மாறிடுச்சு. அடுத்தது ரெண்டு ரன்கள் வெற்றிக்குத் தேவைனு இருந்தப்போ, நாலாவது பந்துலயும் ரபடா நோபால் போட, அதுக்குப் பதிலா போட்ட பந்துல ரெண்டாவது ரன் ஓடுறப்போ, வைரமுத்து வயிற்றுக்கும், தொண்டைக்கும் இடையில உருண்ட ஓடுதுனு சொன்ன மாதிரி பரூக்கி பேட்ட காத்துல கீழனு ஒழுங்கா வைக்காம ரன்அவுட் ஆக, சூப்பர் ஓவர் போயிடுச்சி மேட்ச்.

சூப்பர் ஓவர் 1:

நிகிடி சூப்பர் ஓவரப் போட, குர்பாஸ் மற்றும் அஸ்மத் ஆட ஒரு ஆறு, ரெண்டு நாலு உட்பட 17 ரன்கள் அடிச்சது ஆஃப்கானிஸ்தான். சேசிங் பண்ண மில்லரும் பிரீவிசும் வர பரூக்கி பந்துவீச, ஒரு சிக்ஸ் அடிச்சாலும் பிரீவிஸ் அடுத்த பந்துல அவுட்டானதும் ஆஃப்கானிஸ்தான்க்கு பிரகாசம் தெரிஞ்சது. அடுத்து வந்த ஸ்டப்ஸ் அந்த ஒளியை அணைக்கிற மாதிரி ஒரு நாலு ஒரு ஆறுனு அடிச்சி மறுபடியும் ஸ்கோர் லெவல். வாங்க மறுபடியும் செத்து விளையாடலாம்னு ஆகிப்போச்சு.

சூப்பர் ஓவர் 2:

மொத சூப்பர் ஓவர்ல அவுட்டாகாம இருந்த மில்லரும் ஸ்டப்சும் மறுபடியும் உள்ளவந்து மூணு சிக்ஸர்களோட 23 ரன்களை நொறுக்கினாங்க. 24 ரன்கள்லாம் ஆஃப்கானிஸ்தான் அடிக்க சான்ஸே இல்லனு தோணுச்சு. அதுக்கேத்த மாதிரி மொத பந்து டாட், அடுத்த பந்து நபி அவுட். ஆனா அடுத்துவந்த குர்பாஸ் அடிச்சத மறக்குறது கஷ்டம். ஹாட்ரிக் சிக்ஸர்களைப் பறக்கவிட்டார் குர்பாஸ். பவுலர் மஹராஜ் பாவம்னு தோணுச்சு இப்போ. கடைசிப்பந்துல சிக்ஸ் அடிச்சா வெற்றி. பவுலர் ஒரு அகலப்பந்து போட, பதிலுக்கு மறுபடியும் போட்ட கடைசிப்பந்துல மில்லர் பிடிச்ச கேட்ச்சால தென்னாப்பிரிக்கா 4 ரன்கள் வித்தியாசத்துல விண் பண்ணி மேட்ச்ச ஒருவழியா முடிச்சுவச்சாங்க, மறக்கமுடியாத போட்டியா மாத்திட்டாங்க.

என்ன நடந்திருக்கலாம்?:

ஆஃப்கானிஸ்தான் இன்னிங்ஸ்ல கடைசி விக்கெட்க்கு அந்த ரெண்டாவது ரன் ஓடாம இருந்து அடுத்த ரெண்டு பந்துகள்ல முயற்சி பண்ணிருந்திருக்கலாம். அதுவும் ரபடாவே ஒரு நோபால் அல்லது அகலப்பந்து போடவும் வாய்ப்பு இருந்திருக்கலாம் அடுத்த ரெண்டு பந்துகள்ல.

அழகு
மசாலா

An Initiative of a Group of Woman

fssai
22424031000208

Home Made PRODUCT

NO
Artificial flavors
Preservatives
Added colors

விலைப்பட்டியல்

(1 கிலோ)	MRP	புதிய விலை
மஞ்சள் தூள்	ரூ.400	ரூ.300
தனி மிளகாய் தூள்	ரூ.500	ரூ.350
மல்லி தூள்	ரூ.350	ரூ.250
குழம்பு மிளகாய் தூள்	ரூ.400	ரூ.320
ரசப்பொடி	ரூ.700	ரூ.550
சாம்பார் பொடி	ரூ.440	ரூ.350
பிரியாணி மசாலா	ரூ.850	ரூ.700
கரம் மசாலா	ரூ.750	ரூ.600

For Orders
888 30 29 301
Taste Made for you!

அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.

Page : 01

அழகு
மசாலா
An Initiative of a Group of Woman
fssai
22424031000208
Home Made
PRODUCT
NO
Artificial flavors
Preservatives
Added colors
விலைப்பட்டியல்
(இட்லி பொடி வகைகள்)
(1 கிலோ)
MRP
புதிய விலை
இட்லி பொடி ரூ.350 ரூ.300
சென்னாகுன்னி பொடி ரூ.800 ரூ.600
கருவேப்பிலை பொடி ரூ.550 ரூ.450
Rice Mix
பருப்பு சாதம் பொடி ரூ.600 ரூ.400
For Orders
888 30 29 301
Taste Made for you!
அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.
Page : 02

உலகக் கோப்பை – ஹைலைட்ஸ் - 1

நெதர்லாந்து – பாகிஸ்தான்:

கே(மே)ட்சைத் தவறவிட்ட மேக்ஸ் ஓ தவுத்

உலகக்கோப்பையின் முதல் போட்டியில் பாகிஸ்தான் - நெதர்லாந்து அணிகள் மோதின. நெதர்லாந்து 147 ரன்களே எடுத்தது. ஒருகட்டத்தில் வெற்றிவாய்ப்பு நெதர்லாந்து வசம் இருந்தது. முக்கியமான தருணத்தில் பஹீம் அஸ்ரப் கொடுத்த கேட்ச்சைத் தவறவிட்டார் மேக்ஸ் ஓ தவுத். அதற்குப்பிறகு பஹீம் இரண்டு சிக்ஸர்கள், இரண்டு ஃபோர்கள் அடித்து பாகிஸ்தான் அணியை வெற்றிபெற வைத்தார்.

ஸ்காட்லாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

ஷெப்பர்டின் ஹாட்ரிக்

ஹெட்மேர் 36 பந்துகளில் 64 ரன்கள் அடிக்க வெஸ்ட் இண்டீஸ்க்கு 182 ரன்கள் கிடைத்தது. ஸ்காட்லாந்துக்குக் கடினஇலக்கு தான் என்றாலும் போராடியது. ஷெப்பர்டின் ஹாட்ரிக் ஸ்காட்லாந்தைப் பாதாளத்தில் தள்ளியது. வெஸ்ட் இண்டீஸ் 35 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா – அமெரிக்கா:

சுழன்றடித்த சூறாவளி சூர்யகுமார்

அமெரிக்கப் பந்துவீச்சில் அனல் பறந்தது. இந்திய அணி சொந்த மண்ணில் 77 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்தது. ஆனால் கேப்டன் சூர்யகுமார்

நங்கூரம் போட்டு ஆடினார். பந்துகளைத் தேர்வுசெய்து தெறிக்கவிட, இந்தியா 161 ரன்களை எட்டியது. வான் ஸ்கால்விக் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தியப் பந்துவீச்சாளர்கள் அமெரிக்க அணிக்கு அதிக இடம் தரவில்லை. 132 ரன்கள் மட்டுமே எடுத்து 29 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது அமெரிக்கா.

ஆப்கானிஸ்தான் - நியூசிலாந்து:

செய்பிரட்டின் தரமான செய்கை

பேட்டிங்கில் முன்னதாக இறங்கிய குல்பதீன் நயீப் (63) அதிரடி காட்ட, ஆப்கானிஸ்தான் 182 ரன்கள் எடுத்தது. முஜீப் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்த ஆட்டம் சூடுபிடித்தது. ஆனால் செய்பிரட் அரைசதம் (65) அடிக்க, மற்றவர்கள் துணைநிற்க, நியூசிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதாக வென்றது.

இங்கிலாந்து - நேபாள்:

நெருங்கி வந்த நேபாள்

ஜேக்கப் பெத்தேல் (55), ஹாரி புரூக் (53) அரைசதங்களால் இங்கிலாந்து 184 ரன்களை எட்டியது. ரோகித் பவ்டெல் (39), தீப்பேந்திரா எர்ரீ (44), லோகேஷ் பாம் (39*) ரன்களால் நேபாள் நெருங்கியது இலக்கை. கடைசி ஓவரில் 10 ரன்கள் தேவைப்பட, கச்சிதமாக வீசிக் காப்பாற்றினார் சாம் கர்ரன். இங்கிலாந்து 4 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை - அயர்லாந்து:

கமிந்துவின் கலக்கல்

அயர்லாந்து நன்றாகப் பந்துவீசியது. கடைசி 5 ஓவர்களில் பந்து வீச்சில் சொதப்ப, அதைப் பயன்படுத்தி கமிந்து மெண்டிஸ் 19 பந்துகளில் 44 ரன்கள் குவிக்க, இலங்கை 163 ரன்களை எட்டியது. அயர்லாந்து பேட்டிங்கிலும் 15வது ஓவர் வரை சிறப்பாகவே ஆடியது. இறுதிக்கட்ட ஓவர்களில் சொதப்பி 20 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இத்தாலி - ஸ்காட்லாந்து:

முன்சே பேட்டிங், லீஸ்க் பவுலிங்

ஸ்காட்லாந்து துவக்கவீரர் ஜார்ஜ் முன்சே 84 ரன்கள் அடிக்க 207 ரன்களைக் குவித்தது. இத்தாலிக்கு இலக்கு பெரியது. முதல் போட்டியிலே கேப்டன் காயம் காரணமாக வெளியேறியதும் பின்னடைவாய் அமைய, 134 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. பென் மனென்டி அரைசதம் (52) மட்டுமே ஆறுதல். ஸ்காட்லாந்து 73 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஓமன் - ஜிம்பாப்வே:

பவர்ப்ளேவில் கலக்கிய முசாரபாணி

ஓமன் அணி முதலில் பேட்டிங் செய்து பவர்ப்ளேவில் 4 விக்கெட்டுகளை இழந்தது. முசாரபாணி அதில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஓமன் ஓரளவுக்குத் தேறி 103 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. முசாரபாணி, இங்காரவா, இவான்ஸ் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சிறிய இலக்கைத் துரத்திய ஜிம்பாப்வேயின் துவக்கவீரர் பிரையன் பென்னட் 48* ரன்கள் அடிக்க, எளிதாக 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

கனடா - தென்னாப்பிரிக்கா:

மார்க்ரமின் அதிரடியில் ஆடிப்போன கனடா

தென்னாப்பிரிக்கக் கேப்டன் மார்க்ரம் 32 பந்துகளில் 59 ரன்கள் சேர்த்தார். மற்றவர்களும் பங்களிக்க, தென்னாப்பிரிக்கா 213 ரன்களைக் குவித்தது. கனடா அணி எளிதில் விடவில்லை, நவ்னீத் ஸாகிவால் அரை சதத்தால் (64) 156 ரன்களை எட்டியது. நிகிடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். தென்னாப்பிரிக்கா 57 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

நமீபியா - நெதர்லாந்து:

ஆல்ரவுண்ட் டீ லீடே

முதலில் பேட் செய்த நமீபியா லோப்டி ஏட்டன் 42, பிரைலிங்க் 30 அடிக்க 156 ரன்களை எட்டியது. பந்துவீச்சில் 2 விக்கெட்டுகளை வீழ்த்திய பாஸ் டீ லீடே 3வது வீரராகக் களமிறங்கி 48 பந்துகளில் 72* ரன்கள் எடுக்க நெதர்லாந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

நியூசிலாந்து - எமிரேட்ஸ்:

ஆலன் - செய்பிரட்டின் தாண்டவம்

எமிரேட்ஸின் நட்சத்திர வீரர்கள் முகமது வசீம் (66), அலிஷன் ஷராபு (55) அடிக்க, எமிரேட்ஸ்க்கு 173 ரன்கள் கிடைத்தது. சேஸ் செய்த நியூசிலாந்து அணியின் துவக்க வீரர்கள் பின் ஆலன் (84*) - டிம் செய்பிரட் (89*) யானைப்பசிக்கு சோளப்பொறி என அடித்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தனர்.

பாகிஸ்தான் - அமெரிக்கா:

அமெரிக்காவை சரித்த பர்ஹானும், உஸ்மானும்

ஷாகிப்ஸடா பர்ஹான் அரைசதமும் (73), பாபர் அசாம் 46 ரன்களும் அடிக்க 190 ரன்களை எட்டியது பாகிஸ்தான். வான் ஸ்கால்விக் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இலக்கைத் துரத்திய அமெரிக்க அணியின் ஸாயன் ஜஹாங்கிர் 49, சுபம் ரஞ்சனே 51 ரன்களும் அடித்தனர். இறுதிக்கட்ட வீரர்கள் சரணடைய, அமெரிக்கா 158 ரன்களே எடுத்தது. உஸ்மான் தாரிக் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் 32 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆப்கானிஸ்தான் - தென்னாப்பிரிக்கா:

இரட்டை சூப்பர் ஓவர்

குயின்டன் டீ காக் (59), ரியான் ரிக்கெல்டன் (61) அரைசதங்களால் தென்னாப்பிரிக்கா 187 ரன்களை எட்டியது. சேஸ் செய்த ஆப்கானிஸ்தான் அணியில் குர்பாஸ் நம்பிக்கை தந்தார். ஆனால் போட்டி கைமீறிப்போனது. ஆனால் ரபாடா போட்ட நோபால் மூலம் மீண்டும் ஆட்டம் ஆப்கானிஸ்தான் வசம் வந்து டை ஆனது. முதல் சூப்பர் ஓவர் டையில் முடிய மீண்டும் சூப்பர் ஓவர், மீண்டும் குர்பாஸ் நம்பிக்கை, மீண்டும் பின்னடைவு என தென்னாப்பிரிக்கா வென்றது.

ஆஸ்திரேலியா - அயர்லாந்து:

எல்லிஸ் - ஸாம்பா அபார பந்துவீச்சு

இங்க்லிஷ், ரென்ஷா தலா 37 ரன்களும், ஸ்டோய்னிஸ் 45 ரன்களும் அடிக்க ஆஸ்திரேலியா 182 ரன்களைக் குவித்தது. நாதன் எல்லிஸ், ஆடம் ஸாம்பா தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்த, அயர்லாந்து 115 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. ஆஸ்திரேலியா 67 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - வெஸ்ட் இண்டீஸ்:

ரூதர்போர்டின் அதிரடி

ரூதர்போர்ட் 42 பந்துகளில் 76 ரன்கள் அடிக்க, வெஸ்ட் இண்டீஸ் 190 ரன்களை எட்டியது. சேஸ் செய்த இங்கிலாந்து அணி 166 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. சாம் கர்ரன் 43*, குடகேஸ் மோட்டி 3/33. வெஸ்ட் இண்டீஸ் 30 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை - ஓமன்:

ஷானகவின் அதிரடி அரைசதம்

முதலில் பேட்டிங் செய்த இலங்கையின் கேப்டன் ஷானக 19 பந்துகளில் அரைசதம் அடித்தார். குஷால் மெண்டிஸ் 61 ரன்களும், பவன் ரத்னாயகே 60 ரன்களும் அடிக்க, இலங்கை 225 ரன்களைக் குவித்தது. சேஸ் செய்த ஓமன் அணி 120 ரன்களே எடுத்தது. சீனியர் வீரர் முகமது நதீம் அரைசதம் (53*) அடித்தார். இலங்கை 105 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இத்தாலி - நேபாள்:

முதல் வெற்றி

முதலில் பேட் செய்த நேபாள் அணி 123 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சேஸ் செய்த இத்தாலி அணியின் துவக்க இணை ஜஸ்டின் மோஸ்கா 60* - அந்தோனி மோஸ்கா 62* அடிக்க இத்தாலி, தனது முதல் உலகக்கோப்பை வெற்றியை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா - நமீபியா:

ஹர்திக்கும் - ஏராஸ்மஸ்ம்

நன்றாகத் துவங்கிய இந்தியா, நமீபியா கேப்டன் ஏராஸ்மஸ் சுழலில் சிக்கியது. கிஷன் 61 ரன்களும் ஹர்திக் பாண்ட்யா 52 ரன்களும் அடிக்க, 209 ரன்கள் எடுத்தது. ஏராஸ்மஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சேஸ் செய்த நமீபியா அணி இந்தியப் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 116 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. வருண் சக்ரவர்த்தி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்தியா 93 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

****

மாதம் ஒரு மங்கை

இந்த மாத மங்கை திருஷ் காமினி. இந்திய அணியின் முன்னாள் வீராங்கனையான காமினி தமிழ்நாட்டை சார்ந்தவர். இடதுகை பேட்டர் மற்றும் லெக்ஸ்பின்னர்.

காமினி தனது 9வது வயதில் கிரிக்கெட்டைத் தனது அப்பா மூலம் விளையாடத் தொடங்கினார். முதலில் ஆண்களோடு விளையாடத் தொடங்கிய காமினி விக்கெட்கீப்பராக இருந்தார். பிறகு தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தில் பயிற்சிக்கு சென்று லெக்ஸ்பின்னர் ஆனார்.

16 வயதில் இந்திய அணியில் இடம் பிடித்த காமினி, ஆசியக்கோப்பைத் தொடரில் ஆடினார். முதல் போட்டியிலேயே 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகி ஆனார். அந்தத் தொடரில் தொடர்நாயகியும் காமினி தான்.

இரண்டு டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ள காமினி, தான் ஆடிய இரண்டாவது டெஸ்டில் 192 ரன்கள் குவித்தார். 2013ல் ஆலன் பார்டர் - கவாஸ்கர் ஸ்காலர்ஷிப்பிற்குத் தகுதிபெற்று பயிற்சி பெற ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் சென்றவர்.

2013 உலகக்கோப்பையில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான போட்டியில் சதமடித்தார் திருஷ் காமினி. அதன் மூலம் உலகக்கோப்பையில் சதமடித்த முதல் இந்திய வீராங்கனை ஆனார். பிசிசிஐயின் சிறந்த வீராங்கனைக்கான விருதை மூன்று முறை வென்றுள்ளார். அதில் ஒன்று இளையோர் பிரிவில்.

மகளிர் சர்வதேசக் கிரிக்கெட்டில்“ அப்ஸ்ட்ரக்டிங் த பீல்ட் (Obstructing the field)” முறையில் அவுட் ஆன ஒரே வீராங்கனை திருஷ் காமினி.

ரயில்வேயில் பணிபுரிந்த காமினி அந்த வேலையைத் துறந்துவிட்டார். காமினி தற்போது ஸ்டார் ஸ்போர்ட்ஸ் தமிழ் வர்ணனையாளராகப் பணியாற்றி வருகிறார்.

	போட்டிகள்	மொத்த ரன்கள்	அதிக பட்சம்	விக்கெட்கள்	பெஸ்ட்	கேட்ச்
டெஸ்ட்	2	237	192	0	-	0
ஒரு நாள்	39	825	113*	9	3/19	5
டி20	3	67	56	-	-	0

இந்த மாதப் போட்டிகள் - மார்ச் 2026				
தேதி	**ஆடும் அணிகள்**		**மைதானம்**	**போட்டி**
மார்ச் 1	தென் ஆப்பிரிக்கா	ஜிம்பாப்வே	டெல்லி	டி20
மார்ச் 1	இந்தியா	வெஸ்ட் இண்டீஸ்	கொல்கத்தா	டி20
மார்ச் 4	அரையிறுதி 1		கொல்கத்தா	டி20
மார்ச் 5	அரையிறுதி 2		மும்பை	டி20
மார்ச் 8	இறுதிப்போட்டி		அகமதாபாத்	டி20
மார்ச் 11	*பங்களாதேஷ்*	*பாகிஸ்தான்*	*மிர்பூர்*	*ஒருநாள்*
மார்ச் 13	*பங்களாதேஷ்*	*பாகிஸ்தான்*	*மிர்பூர்*	*ஒருநாள்*
மார்ச் 13	ஆப்கானிஸ்தான்	இலங்கை	ஷார்ஜா	டி20
மார்ச் 15	*பங்களாதேஷ்*	*பாகிஸ்தான்*	*மிர்பூர்*	*ஒருநாள்*
மார்ச் 15	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	மவுண்ட் மங்கனுய்	டி20
மார்ச் 15	ஆப்கானிஸ்தான்	இலங்கை	ஷார்ஜா	டி20
மார்ச் 17	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	ஹாமில்டன்	டி20
மார்ச் 17	ஆப்கானிஸ்தான்	இலங்கை	ஷார்ஜா	டி20
மார்ச் 20	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	ஆக்லாந்து	டி20
மார்ச் 20	*ஆப்கானிஸ்தான்*	*இலங்கை*	*துபாய்*	*ஒருநாள்*
மார்ச் 22	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	வெலிங்டன்	டி20
மார்ச் 22	*ஆப்கானிஸ்தான்*	*இலங்கை*	*துபாய்*	*ஒருநாள்*
மார்ச் 25	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	கிறிஸ்ட்சர்ச்	டி20
மார்ச் 25	*ஆப்கானிஸ்தான்*	*இலங்கை*	*துபாய்*	*ஒருநாள்*

ஐஎஸ்பிஎல்

இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் லீக் (ஐஎஸ்பிஎல்) தொடர் 2024ல் துவங்கப்பட்ட டென்னிஸ் பந்து கிரிக்கெட் தொடர். சினிமா பிரபலங்கள் தான் அணியின் உரிமையாளர்கள்.

- ✓ பெங்களூரு ஸ்ட்ரைக்கர்ஸ் - கிரித்திக் ரோஷன்
- ✓ சென்னை சிங்கம்ஸ் - சூர்யா
- ✓ பால்கன் ரைசர்ஸ் ஹைதராபாத் - ராம்சரண்
- ✓ டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா - சைஃப் அலிகான் & கரீனா கபூர்
- ✓ மஜ்ஹி மும்பை - அமிதாப்பச்சன்
- ✓ ஸ்ரீநகர் கே வீர் - அக்சய் குமார்
- ✓ அகமதாபாத் லயன்ஸ் - அஜய் தேவ்கன்
- ✓ டெல்லி சூப்பர் ஹீரோஸ் - சல்மான்கான்

ஐஎஸ்பிஎல் அணிகள் மாநிலவாரியாக பெயர் தாங்கினாலும் ஒவ்வொரு மண்டலத்தில் (தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு & மத்திய மண்டலங்கள்) இருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வீரர்கள் அணியில் (18 பேர் கொண்ட மொத்த அணியில்) இருக்கவேண்டும் என்பது விதிமுறை. 19 வயதுக்குட்பட்ட வீரர்கள் இரண்டு பேர் இருக்கவேண்டும்.

மற்ற விதிமுறைகள்

- ➢ 10 ஓவர்களைக் கொண்ட போட்டி, முதல் இரண்டு ஓவர்கள் கட்டாய பவர்ப்ளே இரண்டு பீல்டர்கள் எல்லைக்கோடு அருகே நிற்கலாம். பேட்டிங் பவர்ப்ளே ஒரு ஓவர் அதில் 3 வீரர்கள் எல்லைக்கோடு அருகே நிற்கலாம்.
- ➢ இரு அணிக் கேப்டன்களும் நேர் எதிரே அடிமேல் அடி வைத்து வரவேண்டும், எந்த அணிக் கேப்டன் அடிவைக்க இடமில்லாமல் எதிரணிக் கேப்டன் மீது கால்வைக்கிறாரோ அவர் டாஸ் வென்றவர்.
- ➢ சிக்ஸர் அடிக்கும்போது பந்து பார்வையாளர் அரங்கில் விழுந்தால் ஆறு ரன்களுக்குப் பதிலாக ஒன்பது ரன்கள் வழங்கப்படும்.

➢ இரண்டு ஓவர்கள் டேப் சுற்றப்பட்ட பந்துகள் வீசப்படும்.

இந்த ஆண்டு ஐஎஸ்பிஎல் தொடர் சூரத், லால்பாய் காண்ட்ராக்டர் மைதானத்தில் நடைபெற்றது. 40 லீக் போட்டிகள் மற்றும் ப்ளேஆஃப் போட்டிகள் நடந்தன.

<u>குவாலிபயர் 1, பிப்ரவரி 3</u>

அகமதாபாத் லயன்ஸ் - 57

அமித் நாயக் - 20

ஆஷிஸ் பால் - 3/11

சென்னை சிங்கம்ஸ் - 61/5

கேட்டன் மாத்ரே - 23

ப்ரதமேஷ் தாக்ரே - 2/10

சென்னை சிங்கம்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது

<u>எலிமினேட்டர், பிப்ரவரி 4</u>

டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா - 124/1

குருஷ்ணா கவாலி - 42*

முகமது ஸீஷன் - 1/35

மஜ்ஹி மும்பை - 80

அபிஷேக் குமார் - 43

விவேக் ஸ்லேர் - 3/7

டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா 44 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

<u>குவாலிபயர் 2, பிப்ரவரி 5</u>

அகமதாபாத் லயன்ஸ் - 72/9

ஆஷிக் அலி ஷம்சூ - 29

விவேக் ஸ்லேர் - 3/3

டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா - 74/6

சரோஜ் பரமானிக் - 25

நிஸாம் அலி - 2/6

டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது

<u>இறுதிப்போட்டி, பிப்ரவரி 6</u>

சென்னை சிங்கம்ஸ் - 103/7

கேட்டன் மாத்ரே - 30

சரோஜ் பரமானிக் - 3/18

டைகர்ஸ் ஆஃப் கொல்கத்தா - 74/9

அரிஷ் கான் - 25

அனுராக் சர்ஷார் - 3/17

சென்னை சிங்கம்ஸ் 29 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

<u>ரைசிங் ஸ்டார்ஸ் மகளிர் ஆசியக்கோப்பை</u>

ரைசிங் ஸ்டார்ஸ் மகளிர் ஆசியக்கோப்பை பிப்ரவரி 13 முதல் 22 வரை பாங்காங்கில் நடைபெற்றது. இதில் ஏ பிரிவில் இந்தியா ஏ, பாகிஸ்தான் ஏ, எமிரேட்ஸ் மற்றும் நேபாள் அணிகள் இடம் பெற்றன. பி பிரிவில் பங்களாதேஷ் ஏ, இலங்கை ஏ, தாய்லாந்து மற்றும் மலேசியா அணிகள் இடம்பெற்றன.

நேபாள் மற்றும் மலேசியா அணிகள் மூன்று போட்டிகளிலும் தோற்றன. இந்தியா ஏ அணி முதல் போட்டியில் எமிரேட்ஸ் அணியிடம் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோற்றது.

இந்தியா ஏ, பாகிஸ்தான் ஏ, பங்களாதேஷ் ஏ & இலங்கை ஏ அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

<u>அரையிறுதி 1, பிப்ரவரி 20</u>

இலங்கை ஏ - 118

சஞ்சனா கவந்தி - 31

ராதா யாதவ் - 4/19

இந்தியா ஏ - 119/5

தினேஷ் விரிந்தா - 42

சுஹாசினி ஹிம்ஹனி - 2/33

இந்தியா ஏ 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்ட நாயகி - ராதா யாதவ் - 4/19 & 31*

அரையிறுதி 2, பிப்ரவரி 20

பங்களாதேஷ் ஏ - 110/8

பஹிமா ஹடுன் - 40*

ஹப்ஸா காலித் - 2/25

பாகிஸ்தான் ஏ - 56

ஷாவால் சுல்ஃபர் - 14

சஞ்ஜிதா அஃதெர் மேக்லா - 3/6

பங்களாதேஷ் ஏ 54 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்ட நாயகி - பஹிமா ஹடுன் - 40* & 2/6

இறுதிப்போட்டி, பிப்ரவரி 22

இந்தியா ஏ - 134/7

தேஜல் ஹசப்னிஸ் - 51*

பஹிமா ஹடுன் - 4/25

பங்களாதேஷ் ஏ - 88

சமீமா சுல்தானா - 20

தனுஜா கன்வார் - 2/11

இந்தியா ஏ 46 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்ட நாயகி - தேஜல் ஹசப்னிஸ் - 51*

<u>அதிக ரன்கள் அடித்த வீராங்கனைகள்</u>

ஈஷா ஓஸா (எமிரேட்ஸ்) - 200

தினேஷ் விரிந்தா (இந்தியா ஏ) - 171

ஹனிஸ்மா கருணரத்னே (இலங்கை ஏ) - 124

அனுஷ்கா சர்மா (இந்தியா ஏ) - 116

நன்னாபட் கொஞ்சரோங்கை (தாய்லாந்து) - 113

<u>அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீராங்கனைகள்</u>

பஹிமா ஹடுன் (பங்களாதேஷ் ஏ) - 10

ராதா யாதவ் (இந்தியா ஏ) - 10

தனுஜா கன்வார் (இந்தியா ஏ) - 9

பிரேமா ராவத் (இந்தியா ஏ) - 8

சச்சினி நிஸன்சலா (இலங்கை ஏ) - 8

மூவேந்தர்கள்

கம்ரான் அக்மல்

மோயின் கானுக்குப் பிறகு பாகிஸ்தானுக்குக் கிடைத்த விக்கெட்கீப்பர். அதிரடி ஆட்டத்தால் துவக்கவீரராக மாறினார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் சில கேட்ச்களைத் தவறவிட்டார். அதற்குப்பிறகு கம்ரான் அக்மல் மீது சூதாட்டப் புகார்கள் எழுந்தன.

டெஸ்ட் போட்டிகளில் 2648 ரன்களும், ஒருநாள் போட்டிகளில் 3236 ரன்களும், சர்வதேச டி20 போட்டிகளில் 987 ரன்களும் அடித்துள்ளார்.

2023ல் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற கம்ரான் அக்மல் கிரிக்கெட் மேலாளர் மற்றும் பயிற்சியாளராகப் பணியாற்றி வருகிறார்.

முன்னாள் வீரர் முகமது இலியாஸின் மகளைத் திருமணம் செய்துள்ளார் கம்ரான் அக்மல். பாபர் அசாம் இவருக்கு உறவினர் தான்.

டி20 போட்டிகளில் அதிக ஸ்டம்பிங் (32) செய்த விக்கெட்கீப்பர் பட்டியலில் இரண்டாம் இடத்தில் கம்ரான் அக்மல் உள்ளார் (முதலிடம் தோனி 34). ஒரே இன்னிங்ஸில் அதிக ஸ்டம்பிங் (4) செய்த விக்கெட்கீப்பர் என்ற சாதனை இவர் வசம் உள்ளது (டேனிஷ் ராம்தீனும் 4 ஸ்டம்பிங் செய்துள்ளார்).

உமர் அக்மல்

கம்ரான் அக்மலின் ஏழு சகோதரர்களில் ஒருவர் உமர் அக்மல். இவரும் சர்வதேசக் கிரிக்கெட் வீரர் தான்.

உமர் அக்மல் பகுதிநேர விக்கெட்கீப்பர். மிடில் ஆர்டர் பேட்டர். டெஸ்ட் போட்டிகளில் 1003 ரன்களும், ஒருநாள் போட்டிகளில் 3194 ரன்களும், சர்வதேச டி20 போட்டிகளில் 1690 ரன்களும் அடித்துள்ளார்.

ஸ்பாட் பிக்சிங் காரணமாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தால் 18 மாதங்கள் தடை செய்யப்பட்டார். இவர் சுழற்பந்து வீச்சாளர் அப்துல் காதரின் மகளை மணந்துள்ளார்.

அட்னன் அக்மல்

அட்னன் அக்மல், கம்ரான் அக்மலின் இன்னொரு சகோதரர். பாகிஸ்தான் ஏ அணியின் விக்கெட்கீப்பராக இருந்தவர். சுல்கெர்னைன் ஹைதர் ஓய்வு அறிவித்ததால், அட்னன் அக்மலுக்கு சர்வதேசவாய்ப்பு கிடைத்தது. இவர் 21 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் ஆடியுள்ளார். இவரும் விக்கெட்கீப்பர் தான். அட்னன் அக்மல், உமர் அக்மலை விட வயதில் மூத்தவர்.

டெஸ்ட் போட்டிகளில் 591 ரன்களும், ஒருநாள் போட்டிகளில் 62 ரன்களும் அடித்துள்ளார்.

சாதனைத் துளிகள்

சர்வதேச டி20 போட்டிகளில் அதிக கேட்ச்கள் பிடித்த வீரர்கள்

வ. எண்	வீரர்	அணி	போட்டிகள்	இன்னிங்ஸ்	கேட்ச்கள்
1	டேவிட் மில்லர்	தென் ஆப்பிரிக்கா	138	137	85
2	முகமது நபி	ஆப்கானிஸ்தான்	152	152	82
3	ஜார்ஜ் டாக்ரெல்	அயர்லாந்து	157	154	75
4	முகமது வசீம்	எமிரேட்ஸ்	97	97	74
5	மார்ட்டின் கப்தில்	நியூஸிலாந்து	122	121	68
6	பாபர் அசாம்	பாகிஸ்தான்	145	144	68
7	ஷர்வின் முனியாண்டி	மலேசியா	112	110	67
8	ஹாரி டெக்டார்	அயர்லாந்து	98	98	66
9	டிம் சௌதி	நியூஸிலாந்து	126	124	65
10	ரோகித் சர்மா	இந்தியா	159	159	65

போட்டித் துணுக்குகள்

இலங்கை - வெஸ்ட் இண்டீஸ்

- ✓ இலங்கை அணி வெஸ்ட் இண்டீஸ்க்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடியது.
- ✓ வெஸ்ட் அணியின் கேப்டன் ஹெய்லி மேத்யூஸ் மற்றும் இலங்கை அணிக் கேப்டன் சமாரி அட்டப்பட்டு இருவரும் துவக்க ஆட்டக்காரர்கள். இருவரும் ஆஃப் ஸ்பின்னர்கள்.

- ✓ முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை 10 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. இலங்கை அணியின் ஹாசினி பெரீரா (61) மற்றும் ஹர்ஷத் சமரவிக்ரம (66) அரைசதம் அடித்தனர்.
- ✓ ஹாசினி பெரீராவுக்கு 2வது ஒருநாள் அரைசதம். ஹர்ஷிதா சமரவிக்ரமவிற்கு 6வது ஒருநாள் அரைசதம்.
- ✓ வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஸ்டபெயின் டெய்லர் (66), ஜெனிலியா கிளாஸ்கோ (50) அரைசதம் அடித்தனர்.
- ✓ ஸ்டபெயின் டெய்லருக்கு இது 42வது ஒருநாள் அரைசதம். ஜெனிலியா கிளாஸ்கோவுக்கு முதல் ஒருநாள் அரைசதம்.
- ✓ இனோக ரணவீர 4 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகி ஆனார்.

- ✓ 2வது ஒருநாள் போட்டியில் இலங்கை 14 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ இலங்கை அணியின் விஷ்மி குணரத்னே (58) தனது 3வது ஒருநாள் அரைசதத்தை அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஜெனிலியா கிளாஸ்கோ (50) அரைசதம் அடித்தார்.
- ✓ 3வது ஒருநாள் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.
- ✓ இலங்கை அணியின் ஹர்ஷிதா சமரவிக்ரம (70) அரைசதம் அடித்தார்.
- ✓ வெஸ்ட் இண்டீஸ் அணியின் கேப்டன் ஹெய்லி மேத்யூஸ் (100) சதமடித்தார். இது அவரது 10வது ஒருநாள் சதம்.
- ✓ வெஸ்ட் இண்டீஸ் அணியின் கரிஷ்மா ராம்கரேக் தனது 50வது ஒருநாள் விக்கெட்டை வீழ்த்தினார்.

- ✓ வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஸ்டபெயின் டெய்லர் (6004) ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் குவித்த வீராங்கனைகளில் 2ம் இடத்தைப் பிடித்தார். முதலில் மித்தாலி ராஜ் 7805 ரன்கள்.

இலங்கை - இங்கிலாந்து

இலங்கை சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி ஒருநாள் மற்றும் இருபது ஓவர் தொடரில் பங்குபெற்றது. ஒருநாள் தொடர் சென்ற மாத இதழில் எழுதப்பட்டிருந்தது. அதை இங்கிலாந்து 2-1 என வெற்றிபெற்றிருந்த நிலையில், அதற்குப்பின்பு 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடர் பல்லிகல்லே சர்வதேச மைதானத்தில் நடைபெற்றது. இந்தத் தொடரில் இங்கிலாந்து 3-0 என வெள்ளையடித்தது.

முதல் போட்டி:

மழை காரணமாக 17 ஓவர் போட்டியாக மாற்றியமைக்கப்பட்டது. முதலில் பேட் செய்த இலங்கை அணி 16.2 ஓவரில் 133 ரன்களில் இங்கிலாந்தின் அதிரடிப் பந்துவீச்சில் சுருண்டது. குசல் மெண்டிஸ் அதிகபட்சமாக 37 ரன்கள் அடித்தார். பந்துவீச்சில் அடில் ரஷீத் 3/19 (4), சாம் கரன் 3/38 (3). 134 என்ற இலக்கை நோக்கிக் களம் இறங்கிய இங்கிலாந்து அணி 15 ஓவர் முடிவில் 125/4 என்ற நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. DLS முறைப்படி இங்கிலாந்து வென்றதாக அறிவிக்கப்பட்டது. பிலிப் சால்ட் அதிகபட்சமாக 46 (35) ரன்கள் குவித்தார். ஈஷன் மலிங்கா - 2/24 (2).

ஆட்டநாயகன்: அடில் ரஷீத் - 3/19(4)

இரண்டாவது போட்டி:

முதலில் பேட் செய்த இலங்கை அணி நல்ல துவக்கம், அடுத்தடுத்து வந்த வீரர்களும் குறிப்பிடத்தகுந்த ஆட்டம் மூலம் 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 189 ரன்கள் குவித்தனர். பவன் ரத்னாயக்கே அதிகபட்சமாக 40 (22)

ரன்கள் குவித்தார். ஜோப்ரா ஆர்ச்சர் - 2/42 (4). பின்பு மழை காரணமாக இங்கிலாந்து அணிக்கு இலக்கு 17 ஓவரில் 168 என மாற்றியமைக்கப்பட்டது. டாம் பண்டனின் 54* (33) மற்றும் ஹரி ப்ருக் - 36 (12) அதிரடியில் 16.4 ஓவர்களில் இலக்கைக் கைப்பற்றி (173/4), தொடரை இங்கிலாந்து தன்வசப்படுத்தியது.

ஆட்ட நாயகன்: டாம் பண்ட்டன் - 54* (33)

மூன்றாவது போட்டி:

தொடரை இழந்து ஆறுதல் வெற்றியாவது வாய்க்குமா என்று எதிர்பார்த்துக் களம் இறங்கிய இலங்கை அணி, சிறப்பான பந்துவீச்சில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணியை 20 ஓவரில் 128/9 சுருட்டியது. சாம் கரன் 58 (48) ரன்கள் குவித்தார். பந்துவீச்சில் துஷ்மந்தா சமீரா சிறப்பாக செயல்பட்டு 5/24 (4) என அசத்தினார். 129 என்ற எளிய இலக்கை நோக்கிக் களம் இறங்கிய இலங்கை அணிவீரர்கள் தொடக்கம் கிடைத்தும் அதை சரிவரப் பயன்படுத்தவில்லை. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 26 (26) ரன்கள் சேர்த்தார். ஜேக்கப் பெத்தல் - 4/11 (3.3) & வில் ஜேக்ஸ் - 3/14 (4) என அசத்தலான இங்கிலாந்தின் பந்துவீச்சில் 19.3 ஓவரில் 116 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து இலங்கைக்கு தொடரில் ஆறுதல் வெற்றிக்கும் வழியின்றி முடிந்தது.

ஆட்டநாயகன்: சாம் கரன் - 58 (48)

தொடர் நாயகன் - சாம் கரன் - 79 ரன்கள் & 3 விக்கெட்கள்

இங்கிலாந்தின் இந்தத் தொடர் வெற்றியின் மூலம் தொடர்ந்து 11 வது முறையாக இலங்கைக்கு எதிரான 20 ஓவர் தொடரை வெல்கின்றனர்.

உலகக் கோப்பை – ஹைலைட்ஸ் - 2

ஆஸ்திரேலியா - ஜிம்பாப்வே:

முடித்துவிட்ட முசாரபாணி

பென்னட் அரைசதம் (64*) அடித்து ஆட்டமிழக்காமல் இருக்க, மருமணி, ப்ரூல் தலா 35 அடிக்க, ஜிம்பாப்வே 169 ரன்கள் எடுத்தது. முசாரபாணி, இவான்ஸ் தலைக்கு இரண்டாக பவர்ப்ளேவில் நான்கு ஆஸ்திரேலியர்களை வெளியேற்றினர். அரைசதம் கடந்து ஆடிய ரென்ஷாவின் 65 ரன்கள் வீணாய்ப்போனது. ஜிம்பாப்வே 23 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. ஜிம்பாப்வேயின் பீல்டிங்கும் சிறப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கனடா - எமிரேட்ஸ்:

சோயப் கானின் அதிரடி

ஹர்ஷ் தாகேர் 50, நவ்னீத் தலிவால் 38 ரன்களால் கனடாவுக்கு 150 ரன்கள் கிடைத்தது. ஜூனைட் சித்திக் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பந்துவீச்சில் கலக்கிய கனடா 66 ரன்களுக்கு நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியது. ஆனால் எமிரேட்ஸின் துவக்கவீரர் ஆரியான்ஷ் சர்மாவின் அரைசதம் 74* மற்றும் சோயப்கானின் அதிரடி அரைசதத்தால் (51) கடைசி ஏழு ஓவர்களில் ஆட்டம் மாறியது. எமிரேட்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

நெதர்லாந்து – அமெரிக்கா:

முக்கமல்லா - ரஞ்சனே அதிரடி

சாய்தேஜா முக்கமல்லா அரைசதம் (79) மற்றும் சுபம் ரஞ்சனே (48*) ரன்கள் அடிக்க அமெரிக்கா 196 ரன்களைக் குவித்தது. அமெரிக்கப் பந்துவீச்சில் நிலைகுலைந்து நெதர்லாந்து 103 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. ஹர்மீட் சிங் 4

விக்கெட்டுகளையும் வான் ஷால்விக் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். அமெரிக்கா 93 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

அயர்லாந்து - ஓமன்:

துவம்சம் செய்த டக்கர், டெலானி& டாக்ரெல்

அயர்லாந்து அணியின் பொறுப்புக் கேப்டனாக லோர்கன் டக்கர் செயல்பட்டார். டக்கர் 51 பந்துகளில் 94* ரன்களும், டெலானி 30 பந்துகளில் 56 ரன்களும், டாக்ரெல் 9 பந்துகளில் 35 ரன்களும் அடிக்க அயர்லாந்து 235 ரன்களைக் குவித்தது. ஷகீல் அகமது 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஓமன் அணியின் துவக்கவீரர் ஆமீர் கலீம் அரைசதம் (50) அடித்தார். ஹம்மத் மிர்ஸா 46 ரன்களில் ரன்அவுட் ஆனார். ஓமன் 139 ரன்களுக்கு ஆல்அவுட் ஆக அயர்லாந்து 96 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - ஸ்காட்லாந்து:

சுழலில் சிக்கிய ஸ்காட்லாந்து

ஸ்காட்லாந்து 152 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக கேப்டன் பேரிங்டன் 49 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து சுழற்பந்துவீச்சாளர்கள் அடில் ரஷீத் 3 விக்கெட்டுகளையும், லியாம் டாசன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். டாம் பேண்டன் 63* ரன்கள் அடிக்க இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

நியூசிலாந்து - தென்னாப்பிரிக்கா:

மார்கோவும், மார்க்ரமும்

நியூசிலாந்து முதலில் பேட்டிங் செய்து 175 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக சாப்மேன் 48 ரன்கள் அடித்தார். மார்கோ யென்சென் 4 விக்கெட்டுகளை

வீழ்த்தினார். தென்னாப்பிரிக்கா கேப்டன் மார்க்ரம் அதிரடி காட்ட (86*), தென்னாப்பிரிக்கா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

நேபாள் - வெஸ்ட் இண்டீஸ்:

ஹோல்டரின் வேகத்தில் வீழ்ந்த நேபாள்

வெஸ்ட் இண்டீஸின் சிறப்பான பந்துவீச்சுக்கு எதிராக நேபாள் சேர்த்தது 133 ரன்கள். தீப்பேந்திர சிங் எர்ரீ 58 ரன்கள் அடித்தார். ஜேசன் ஹோல்டர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கேப்டன் ஷாய் ஹோப் அரைசதத்தால் (61*) 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது வெஸ்ட் இண்டீஸ்.

நமீபியா - அமெரிக்கா:

கிருஷ்ணமூர்த்தி & பட்டேலின் அரைசதங்கள்

அமெரிக்க அணியின் கேப்டன் மோனன்க் பட்டேல் (52), சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி (68*) அரைசதங்கள் அடித்து நமீபியாவுக்கு 199 ரன்களை இலக்காக நிர்ணயித்தனர். நமீபியா அணியின் துவக்கவீரர் ஸ்டீன்காம்ப் அரைசதம் (58) அடித்தார். நமீபியா 20 ஓவர்களில் 168 ரன்களே அடித்தது. அமெரிக்கா 31 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா - பாகிஸ்தான்:

தனித்து நின்ற இஷான் கிஷன்

இஷான் கிஷன் 40 பந்துகளில் 77 ரன்கள் அடித்தார். மற்றவீரர்களின் பேட்டிங்கைப் பார்த்தபோது அவர்மட்டும் தனி மைதானத்தில் ஆடியது போல் தோன்றியது. இந்தியா 175 ரன்கள் எடுத்தது. சைம் அயூப் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பாகிஸ்தான் அணி 114 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக உஸ்மான் கான் 44 ரன்கள் அடித்தார். இந்தியா 61 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆப்கானிஸ்தான் - எமிரேட்ஸ்:

ஆல்ரவுண்ட் அஸ்மத்துல்லா

எமிரேட்ஸ் அணி முதலில் பேட்டிங் செய்து 160 ரன்கள் எடுத்தது. அலிஷன் ஷராபு (40) - சோயப் கான் (68) இணை சிறப்பாக ஆடியது. வேகப்பந்துவீச்சாளர் அஸ்மத்துல்லா ஓமர்சாய் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்ராஹீம் ஷத்ரான் அரைசதம் (53) அடிக்க, இறுதிக்கட்டத்தில் ஓமர்சாய் 40 ரன்கள் அடிக்க, ஆப்கானிஸ்தான் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - இத்தாலி:

ஆல்ரவுண்டர்களின் ஆட்டம்

இங்கிலாந்து 202 ரன்களைக் குவித்தது. சேஸ் செய்த இத்தாலி 178 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. இந்தப்போட்டியில் இங்கிலாந்து ஆல்ரவுண்டர்கள் வில் ஜாக்ஸ், சாம் கர்ரன் முறையே 53* ரன்கள், 1 விக்கெட் & 25 ரன்கள், 3 விக்கெட்டுகள் எடுத்தனர். இத்தாலி ஆல்ரவுண்டர்கள் கிராண்ட் ஸ்டீவர்ட் & பென் மனென்டி முறையே 2 விக்கெட்டுகள், 45 ரன்கள் & 1 விக்கெட், 60 ரன்கள் எடுத்தனர். இங்கிலாந்து 24 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை - ஆஸ்திரேலியா:

சுழற்பந்து முற்பாதி, பதும் நிஸங்க பிற்பாதி

முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா பத்து ஓவர்கள் வரை (110/2) சிறப்பாக ஆடியது. மார்ஷ் 54, ஹெட் 56 அடித்தனர். அடுத்த பத்து ஓவர்களில் இலங்கை பந்துவீச்சில் கலக்க, ஆஸ்திரேலியா 181 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இலங்கை சுழற்பந்துவீச்சாளர்கள் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சேசிங்கில் பதும் நிஸங்கவுக்கு ஆட்டம் பிடிக்க 52 பந்துகளில் 100* ரன்கள் அடித்தார்.

குஷால் மெண்டிஸ் 51 ரன்கள் எனத் தனது பங்களிப்பை வழங்கினார். இலங்கை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

கனடா - நியூசிலாந்து:

சம்ராவின் சதம்

19 வயது யுவ்ராஜ் சம்ரா 65 பந்துகளில் 110 ரன்கள் என அதிரடி சதமடிக்க, கனடாவுக்கு 173 ரன்கள் கிடைத்தது. ரச்சின் ரவீந்திரா 59* ரன்கள் (39 பந்துகளில்) மற்றும் க்ளென் பிலிப்ஸ் 76* ரன்கள் (36 பந்துகளில்) என அதிரடி காட்ட, நியூசிலாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதாக வென்றது.

நேபாள் - ஸ்காட்லாந்து:

அனல் பறந்த தீப்பேந்திர ஆட்டம்

ஸ்காட்லாந்து துவக்கவீரர் மைக்கேல் ஜோன்ஸ் அரைசதத்தால் (71), 170 ரன்கள் எடுத்தது. சோம்பல் கமி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார். அதில் ஒன்று ஒற்றைக்கையால் அவரே பிடித்த சிறப்பான கேட்ச். நேபாள் தரப்பில் குஷால் புர்டெல் 43 ரன்களும், தீப்பேந்திர சிங் எர்ரீ அதிரடி அரைசதமும் (50) அடிக்க நேபாள் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

எமிரேட்ஸ் - தென்னாப்பிரிக்கா:

கார்பின் போஸ்ச்சின் கலக்கல்

அதிரடியாகத் துவங்கிய எமிரேட்ஸ் அணி, பவர்ப்ளேவிற்குப்பிறகு பம்மி, பதுங்கி 122 ரன்கள் எடுத்தது. அலிஷன் ஷராபு 45 ரன்கள் அடித்தார். கார்பின்

போஸ்ச் 12 ரன்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். எளிய இலக்கைத் துரத்திய தென்னாப்பிரிக்கா 4 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

நமீபியா - பாகிஸ்தான்:

பர்ஹானின் சதம்

58 பந்துகளில் 100* ரன்கள் என பர்ஹான் அட்டகாசமான சதமடிக்க, பாகிஸ்தான் 199 ரன்களைக் குவித்தது. பாகிஸ்தானின் சுழற்பந்தை நமீபியாவால் எதிர்கொள்ள முடியாமல் 97 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. உஸ்மான் தாரிக் 4 விக்கெட்டுகளையும், சதாப் கான் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பாகிஸ்தான் 102 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா - நெதர்லாந்து:

ஷிவம் துபேவின் சிறப்பான ஆட்டம்

நெதர்லாந்து பந்துவீச்சை சிறப்பாகத் துவங்கியது. ஷிவம் துபே 31 பந்துகளில் 66 ரன்கள் அடிக்க, இந்தியா 193 என்ற கௌரவ இலக்கை எட்டியது. லோகன் வான்பீக் 56 ரன்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நெதர்லாந்து சின்ன சின்ன பார்டனர்ஷிப் மூலம் இலக்கை நெருங்கி, 17 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. வருண் சக்ரவர்த்தி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஷிவம் துபே பந்துவீச்சிலும் கலக்கி 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இத்தாலி - வெஸ்ட் இண்டீஸ்:

நம்பிக்கை தந்த ஹோப்

முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணித்தலைவர் ஷாய் ஹோப் அரைசதம் (75) அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் 165 ரன்கள் எடுத்தது. பென் மனென்டி, கிறிஸன் கலுகமாகே தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீஸ் வேகப்பந்துவீச்சாளர்கள் மேத்யூ போர்ட் 3 விக்கெட்டுகளையும், ஷமர் ஜோசப்

4 விக்கெட்டுகளையும் வீழ்த்த இத்தாலி 123 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. வெஸ்ட் இண்டீஸ் 42 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இலங்கை - ஜிம்பாப்வே:

த்ரில் வெற்றியைத் தந்த பென்னட்டின் பேட்

பதும் நிஸங்கவின் பக்குவமான அரைசதம் (62) மற்றும் பவன் ரத்னாயகேவின் 44 ரன்கள் இலங்கைக்கு 178 ரன்களைத் தந்தது. முசாராபாணி, இவான்ஸ் & க்ரீமர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சேஸ் செய்த ஜிம்பாப்வே அணியின் துவக்கவீரர் பிரையன் பென்னட் (63*) இறுதிவரை களத்தில் நின்று வெற்றிக்கான ரன்களையும் அடித்தார். கேப்டன் ரஸா பக்கபலமாக 45 ரன்கள் அடித்தார். ஜிம்பாப்வே 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

ஆப்கானிஸ்தான் - கனடா:

சாதித்த ஷத்ரான்

ஆப்கானிஸ்தான் துவக்கவீரர் இப்ராஹிம் ஷத்ரான் 95 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். கனடா வெற்றி பெற 201 ரன்களை இலக்காக நிர்ணயித்தது ஆப்கானிஸ்தான். சீனியர் நபி 7 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்த, கனடா 118 ரன்களை மட்டுமே எடுத்தது. ஆப்கானிஸ்தான் 82 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆஸ்திரேலியா - ஓமன்:

ஸாம்பாவின் சுழலில் சிக்கிய ஓமன்

கடைசி லீக் போட்டியில் ஆஸ்திரேலியா ஓமனை 104 ரன்களுக்கு சுருட்டியது. ஆடம் ஸாம்பா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியக் கேப்டன் 33 பந்துகளில் 64* ரன்கள் அடிக்க ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

மறக்க முடியாத போட்டி

2009ல் நடைபெற்ற ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை முத்தரப்புத் தொடரின் 2வது இறுதிப்போட்டி.

தோனி ஒருநாள் போட்டிகளில் கேப்டனாக பங்கேற்ற முதல் தொடரில் ஆஸ்திரேலியா வென்றது. அடுத்து இந்திய அணி பாகிஸ்தான் அணியை வென்றது. தோனி கேப்டனாக செயல்பட்ட 3வது தொடர் முத்தரப்புத் தொடர். இந்தத் தொடருக்கு முன்பாக நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இந்திய - ஆஸ்திரேலிய வீரர்கள் இடையில் நிறைய மோதல்கள் நடந்தன.

முத்தரப்புத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் நான்கு முறை மோதும் வண்ணம் போட்டிகள் நடந்தன.

லீக் போட்டியில் ஆஸ்திரேலியாவுடன் ஒரு போட்டியில் இந்தியா வென்றது. ஒரு போட்டி மழையால் முடிவு இல்லாமல் போனது. இரண்டு போட்டிகளில் தோற்றது. ஆனால் முதல் இறுதிப்போட்டியில் இந்தியா வென்றது. 2வது இறுதிப்போட்டியில் இந்தியா வென்றால் 3வது இறுதிப் போட்டி நடக்காது என்ற நிலை.

இந்தப் போட்டியில் டாஸ் வென்று இந்தியா முதலில் பேட்டிங் செய்தது. துவக்க வீரர்கள் டெண்டுல்கர் - ராபின் உத்தப்பா இணை 94 ரன்கள் சேர்த்தது. முதல் இறுதிப் போட்டியில் சதமடித்த டெண்டுல்கர் இந்தப் போட்டியில் 91 ரன்களில் அவுட்டாகி சதத்தைத் தவறவிட்டார்.

நான்கு வேகப்பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்திய பாண்டிங், கம்பீர் களமிறங்கியதும் மைக்கேல் கிளார்க்கைப் பந்துவீச அழைத்தார். கிளார்க் 2வது ஓவரிலேயே கம்பீரை வீழ்த்தினார். ஆனால் யுவராஜ் - டெண்டுல்கர் இணை நிதானமாக ஆடியது. யுவராஜ், சைமண்ட்ஸ் பந்துவீச்சில் நிதானமிழந்து ஆட்டமிழந்தார்.

40வது ஓவரில் டெண்டுல்கர் வீழ்ந்துவிட ஆஸ்திரேலியர்களின் திறன்வாய்ந்த பந்துவீச்சுக்கு எதிராக தோனி, இர்பான், ரோகித்தால் பெரிய அளவில் ரன்கள் குவிக்கமுடியவில்லை. இந்தியா 258 ரன்கள் எடுத்தது. ப்ரக்கன் சிறப்பாகப் பந்துவீசி இருந்தார்.

பிரவீன் குமார் முதல் ஓவரிலேயே கில்கிறிஸ்ட்டை வெளியேற்ற ஆட்டம் சூடுபிடித்தது. 3வது ஓவரில் பாண்டிங் விக்கெட்டை வீழ்த்தினார் பிரவீன். 4வது ஓவரில் ஹேடனுக்குக் கேட்ச்சைத் தவறவிட்டார் தோனி. 9வது ஓவரில் பிரவீன், மைக்கேல் கிளார்க்கை வெளியேற்றினார்.

13வது ஓவரில் பந்துவீச்சில் மாற்றம் செய்து பதானை வீசவைத்த தோனி, 14 மற்றும் 16வது ஓவரை பிரவீனை வீசவைத்தார். 18வது ஓவரில் ஹர்பஜன் வீசவந்தும் ஹேடன் - சைமண்ட்ஸ் இணையை அசைக்கமுடியவில்லை. 25வது ஓவரை மற்றொரு சுழற்பந்துவீச்சாளர் பியூஷ் சாவ்லா வீச, முதல்பந்தில் சிக்ஸ் அடித்தார் சைமண்ட்ஸ்.

திருப்புமுனை 26வது ஓவரில் நிகழ்ந்தது. யுவராஜ் சிங், பந்துவீச்சு முனையில் ஹேடனை ரன்அவுட்டாக்க, அதே ஓவரில் சைமண்ட்ஸ் எல்பிடபிள்யூ ஆனார்.

அதற்குப்பிறகு மைக்கேல் ஹசி - ஜேம்ஸ் ஹோப்ஸ் இணை சிறப்பாக ஆட, ஆட்டம் மதில்மேல் பூனையாக இருந்தது. 42வது ஓவரில் ஸ்ரீசாந்த், ஹசியை வெளியேற்றினார். ஓரளவுக்கு அடித்து ஆடும் பிரட் லீ, மிட்செல் ஜான்சன் கொஞ்ச நேரம் நின்று அவுட்டாக, கடைசி ஓவரில் 13 ரன்கள் தேவைப்பட்டது.

ஜேம்ஸ் ஹோப்ஸ் - நாதன் பிரக்கன் களத்தில் இருந்தனர். 2வது பந்தில் பிரக்கன் அவுட்டாக அரைசதம் அடித்திருந்த ஹோப்ஸ் பேட்டிங் முனைக்கு வந்தார். 4வது பந்தில் ஹோப்ஸ் அவுட்டாக இந்தியா கோப்பையை வென்றது. தோனி வென்ற தொடர்களில் ஆகச்சிறந்த தொடர் இதுதான்.

புத்தகக் கிரிக்கெட்

புத்தகக் கிரிக்கெட்டில் இந்த மாதம் என்.சொக்கன் எழுதிய "சச்சின் ஒரு புயலின் பூர்வ கதை " என்ற புத்தகம் குறித்து பார்ப்போம்.



2004ல் எழுதப்பட்ட புத்தகம், சச்சினின் சிறுவயது முதல் 2004 வரையிலான வாழ்க்கை வரலாற்றை திறம்பட எழுதியுள்ளார்.

சச்சின் சிறுவனாக இருக்கும்வரை உள்ளவற்றை அவன், இவன் என்று எழுதி, பிறகு அவர், இவர் என்று எழுதி இருப்பது சுவாரசியமாக உள்ளது.

அச்ரேகர் முதல் அர்ஜூன் டெண்டுல்கர் வரை சச்சினின் வரலாற்றை வரிசைப்பட எழுதி இருப்பது சுவராஸ்மாக உள்ளது. ஒரே குறை சச்சின் 200 அடித்தது இடம்பெறவில்லை. ஏனென்றால் புத்தகம் அதற்கு முன்பே எழுதப்பட்டது.

பத்திரிக்கையாளர் எச்.நடராஜன் சச்சினுக்கு என்னென்ன நடக்கும் என்று ஆரூடம் சொன்னதாக எழுதியுள்ளார். அதில் சில நடந்துள்ளது. சச்சின் பாரத ரத்னா விருதுபெற்றுவிட்டார். சச்சின் தனது கடைசி டெஸ்ட் போட்டியை வான்கடேவில் ஆடினார். அவருக்கு பிரமாண்ட மரியாதை செலுத்தப்பட்டது.

ஈடன் கார்டன் மைதானத்திற்கு சச்சின் பெயரைச் சூட்டுவார்கள் என்பது நடைபெறவில்லை. அதேபோல் சச்சினின் நூறு சதங்கள் முன்னிட்டு 100 ரூபாய் நாணயங்கள் வெளியிடப்படும் என்பது நடைபெறவில்லை. சச்சினின் பிறந்ததினமான ஏப்ரல் 24 ஒற்றுமை தினமாக அனுசரிக்கப்படும் என்பதும் நடைபெறவில்லை.

இறுதியாக சச்சினின் புள்ளிவிவரங்களும் இடம்பெற்றுள்ளன. சச்சினின் ரசிகர்கள் மட்டுமில்லாமல் அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களும் வாசிக்க சிறந்த புத்தகம். தமிழில் வந்திருப்பது கூடுதல் சிறப்பு.

இம்பாக்ட் ப்ளேயர்

இம்பாக்ட் ப்ளேயரில் இந்த மாதம் நீல் ஜான்சன். நீல் ஜான்சன் என்றதும் துவக்க பேட்டிங், துவக்க பந்துவீச்சு செய்த வீரர் என்பது நினைவிற்கு வரும்.

இடதுகை பேட்டர், வலதுகை வேகப்பந்து வீச்சாளருமான ஜிம்பாப்வே அணியின் நீல் ஜான்சன் மூன்று ஆண்டுகள் (1998-2000) மட்டுமே சர்வதேசக் கிரிக்கெட் ஆடினார்.

நீல் ஜான்சன் முதல்தரக் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை தென்னாப்பிரிக்கா மற்றும் இங்கிலாந்தில் ஆடியவர். 90களில் தென்னாப்பிரிக்க அணியில் தரமான ஆல்ரவுண்டர்கள் இருந்ததால் தென்னாப்பிரிக்கா அணியில் ஆடுவது பற்றி ஜான்சன் யோசிக்கவில்லை.

ஜான்சன் ஜிம்பாப்வேயில் (ரொடிஷியா) பிறந்திருந்தாலும் படித்தது தென்னாப்பிரிக்காவில். 1998ல் ஜிம்பாப்வேயின் ஆன்டி பைகிராப்ட், நீல் ஜான்சன் ஜிம்பாப்வே அணியில் இணைய ஏற்பாடுகள் செய்தார்.

இந்தியா உடனான டெஸ்ட் போட்டியில் அறிமுகமாவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்புதான் ஜான்சனுக்கு ஜிம்பாப்வே குடியுரிமை கிடைத்தது. ஜான்சன் வீழ்த்திய முதல் சர்வதேச விக்கெட் யார் தெரியுமா? அறிமுகப் போட்டியில் ஜான்சன், டெண்டுல்கரை தனது முதல் விக்கெட்டாக வீழ்த்தினார்.

ஜான்சன் ஜிம்பாப்வே அணியில் முழு ஈடுபாட்டுடன் ஆடினார். 1999 உலகக்கோப்பையில் இந்தியா, தென்னாப்பிரிக்கா அணிகளை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஜிம்பாப்வே. அந்தத் தொடரில் 3 போட்டிகளில் ஆட்டநாயகன் ஆனார் நீல் ஜான்சன்.

2000ல் நீல் ஜான்சன், தென்னாப்பிரிக்காவில் முதல்தரப்போட்டிகளில் ஆட ஒப்பந்தம் செய்தார். அதனால் ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியம் அவரது ஒப்பந்தை ரத்து செய்தது. ஜான்சனும் சம்பளப் பிரச்சினையால் ஜிம்பாப்வே கிரிக்கெட் வாரியத்தை விட்டு வெளியேறினார்.

குறுகிய காலமே ஆடினாலும் ஜான்சன் ஒரு தலைசிறந்த ஆல்ரவுண்டர்.

	போட்டிகள்	மொத்த ரன்கள்	அதிக பட்சம்	விக்கெட்கள்	பெஸ்ட்	கேட்ச்
டெஸ்ட்	13	532	107	15	4/77	12
ஒரு நாள்	48	1679	132*	35	4/42	19

ஒடோம்மோ டி20 தொடர்

உலகக்கோப்பைத் தொடரில் இருந்து வெளியேறிய பங்களாதேஷ் அணி, வீரர்களுக்குப் புத்துணர்வு அளிக்க ஒடோம்மோ டி20 தொடரை நடத்தியது.

மூன்று அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்றன. போட்டிகள் மிர்பூரில் நடைபெற்றன. டுரோன்டோ அணியின் கேப்டனாக அக்பர் அலியும், தும்கேது அணியின் கேப்டனாக லிட்டன் தாஸும், தர்பார் அணியின் கேப்டனாக சாண்டேவும் இருந்தனர்.

அக்பர் அலி சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் ஆடாத வீரர். இறுதிப்போட்டிக்குத் தர்பார் மற்றும் தும்கேது அணிகள் முன்னேறின.

இறுதிப்போட்டி:

தான்ஸித் ஹசன் 88* மற்றும் சைப் ஹசன் 79 அதிரடியால் தும்கேது அணி 208 ரன்கள் குவித்தது. தர்பார் அணியில் ஹபிபுர் 67, நுருல் ஹசன் 54, ஆஃபிப் ஹோசைன் 60 அரைசதங்கள் அடித்தும் தர்பார் அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது.

தும்கேது - 208/3

தான்ஸித் ஹசன் - 88*

ஹசன் மஹ்மூத் - 1/31

தர்பார் - 201/5

ஹபிபுர் ரஹ்மான் சோகன் - 67

முஸ்டாபிசூர் ரஹ்மான் - 2/33

தும்கேது 7 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்டநாயகன் - தான்ஸித் ஹசன் - 88*

உலகக்கோப்பையில் சிறிய அணிகள்

20 நாடுகள் உலகக்கோப்பை என்றதும் சிறிய அணிகளின் போட்டிகள் சுவாரஸ்யம் இல்லாமல் இருக்கும். ஒருபக்கசார்பு ஆட்டமாக இருக்கும் என்று பலரும் நினைத்திருந்தனர். ஐசிசி கூட சூப்பர் 8 எந்தெந்த அணிகள் எந்தப் பிரிவு என்று சொல்லி, அந்த அணிகள் வராவிட்டால் மாற்று அணி அந்த பிரிவில் இடம் பெறும் என்றது.

உலகக்கோப்பையில் சிறிய அணிகளின் பங்களிப்பைப் பார்க்கலாம். முதல் போட்டி நெதர்லாந்து அணி பாகிஸ்தான் அணிக்கு போக்குக்காட்டியது. ஒரு கேட்ச்சைத் தவறவிட்டதால் பாகிஸ்தான் அணி வென்றது. அதேபோல் முதல்நாளில் நடைபெற்ற போட்டியில் அமெரிக்க அணி இந்திய அணிக்கு பயத்தைக் காட்டியது. சூர்யகுமார் கொஞ்சம் ரன் சேர்த்ததால் இந்தியா வென்றது. அமெரிக்காவின் வான் ஸ்கால்விக் தொடர்ந்து சிறப்பாகப் பந்துவீசினார்.

நேபாள் அணி இங்கிலாந்தை மிரட்டிப் பார்த்தது. கடைசி இரண்டு பந்துகளில் ஒரு சிக்ஸ் அடித்திருந்தால் நேபாள் வென்றிருக்கும். அனுபவமில்லாத லோகேஷ் பாம் தவறவிட்டார் அந்தத் தருணத்தை.

இலங்கைக்கு எதிரான போட்டியில் 43 வயதான ஓமனின் முகமது நதீம் அரைசதம் அடித்தார். அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் 44 வயதான அமீர் கலீம் அரைசதம் அடித்தார். உலகக்கோப்பையில் அரைசதம் அடித்த வயதான வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

நேபாளுக்கு எதிரான போட்டியில் இத்தாலியின் மோஸ்கா சகோதரர்கள் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தனர்.

அமெரிக்க அணியின் மோனன்க் பட்டேல், சாய்தேஜா முக்கமல்லா, சுபம் ரஞ்சனே, சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அரைசதங்கள் அடித்து முத்திரை பதித்தனர்.

நமீபியா அணியின் கேப்டன் ஹெர்கார்ட் எராஸ்மஸ் பேட்டிங்கில் பெரிய அளவில் சோபிக்கவில்லை என்றாலும் இந்திய அணியின் பலவீனத்தைப் பயன்படுத்தி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கனடாவுக்கு எதிரான போட்டியில் எமிரேட்ஸ் அணியின் ஆர்யான்ஷ் சர்மா - சோயப் கான் இணை 94 ரன்கள் சேர்த்து வெற்றிக்கு வித்திட்டது. அதே போட்டியில் எமிரேட்ஸ் வேகப்பந்துவீச்சாளர் ஜூனைட் சித்திக் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் கனடா அணியின் 19 வயது வீரர் யுவராஜ் சம்ரா சதமடித்தார். டி20 உலகக்கோப்பையில் சதமடித்த இளம் வீரர் சம்ரா.

ஸ்காட்லாந்துக்கு எதிரான போட்டியில் நேபாள் அணியின் தீப்பேந்திர சிங் எர்ரீ அதிரடி அரைசதம் அடித்து வெற்றிபெற வைத்தார்.

ஜிம்பாப்வே அணி ஒரு பேட்டர் (பிரையன் பென்னட்), ஒரு ஆல்ரவுண்டர் (சிக்கந்தர் ரஸா), ஒரு பந்து வீச்சாளர் (பிளஸிங் முசாராபாணி) என மூன்று பேரின் சிறப்பான ஆட்டத்தால் ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை அணிகளை வென்று சூப்பர் 8 சுற்றுக்கு சென்றது.

ஜிம்பாப்வே அணியின் பீல்டிங் சிறப்பாக இருந்தது. குறிப்பாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஃபோர் அடிக்கவிடாமல் சிறப்பான பீல்டிங் மூலம் அழுத்தம் கொடுத்துப் போட்டியை வென்றது.

ஆஸ்திரேலியா - இந்தியா (மகளிர்)

இந்திய அணியின் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம் டி20 போட்டிகளோடு துவங்கியது. முதல் டி20 போட்டி சிட்னியில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியக் கேப்டனாக ஷோபி மோலினெக்ஸ் களமிறங்கினார். போட்டி மழை காரணமாக தாமதமாகத் துவங்கியது. ஆஸ்திரேலியா 133 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. அதிகபட்சமாக ஜார்ஜியா வேர்ஹம் 30 ரன்கள் அடித்தார். சிறப்பாகப் பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார் அருந்ததி ரெட்டி. ஸ்ரீசரணி & ரேணுகா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இந்திய அணியின் துவக்க வீராங்கனை ஷபாலி 21 ரன்கள் எடுத்து அவுட் ஆனாலும் இந்தியா 5.1 ஓவர்களில் 50 ரன்கள் எடுத்தது. மீண்டும் மழை வர இந்தியா 21 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்ட நாயகி - அருந்ததி ரெட்டி - 4/22

2வது போட்டி கான்பெர்ராவில் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணியின் துவக்க இணை 128 ரன்கள் சேர்த்தது. ஜார்ஜியா வுல் 88 ரன்களும், பெத் மோனி 46 ரன்களும் அடித்தனர். ஆஸ்திரேலியா 163 ரன்கள் எடுத்தது.

இந்திய அணி 144 ரன்களே எடுத்தது. அதிகபட்சமாக கேப்டன் ஹர்மன்பிரீட் 36 ரன்கள் அடித்தார். கிம் கார்த், அனபெல் சதர்லேண்ட், ஷோபி மோலினெக்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும், ஆஷ்லே கார்டனர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஆஸ்திரேலியா 19 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்ட நாயகி - ஜார்ஜியா வுல் - 88

3வது போட்டி அடிலெய்டில் நடைபெற்றது. இந்திய அணி, ஸ்மிருதி மந்தனா (82), ஜெமீமா ரோட்ரிக்ஸ் (59) அரைசதங்கள் மூலமாக 176 ரன்கள் எடுத்தது. ஆஸ்திரேலியா அணியின் ஆஷ்லே கார்டனர் அரைசதம் (57) வெற்றிக்கு உதவவில்லை. ஸ்ரேயங்கா பாட்டில் & ஸ்ரீசரணி 3 விக்கெட்டுகளையும், அருந்ததி ரெட்டி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தியா 17 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்ட நாயகி - ஸ்மிருதி மந்தனா - 82

டி20 தொடரை இந்தியா வென்ற நிலையில் ஒருநாள் தொடர் பிரிஸ்பேனில் தொடங்கியது. இந்தியா 214 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. ஸ்மிருதி 58 ரன்களும், ஹர்மன்பிரீட் 53 ரன்களும், கஷ்வி கௌதம் 43 ரன்களும் எடுத்தனர். ஆஷ்லே கார்டனர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஆஸ்திரேலிய அணி கேப்டன் ஹீலி (50), பெத் மோனி (76) அரைசதங்களால் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எளிதாக வென்றது.

ஆட்ட நாயகி - பெத் மோனி - 76

2வது ஒருநாள் போட்டி ஹோபர்ட்டில் நடைபெற்றது. இந்திய அணியில் வைஷ்ணவி சர்மா அறிமுகம் ஆனார். பிரதிகா ராவல் (52) & ஹர்மன்பிரீட் (54) அரை சதங்களால் 251 ரன்கள் எடுத்தது இந்தியா. கார்ட்னர், சதர்லேண்ட் & கிங் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சேஸ் செய்த ஆஸ்திரேலிய அணியின் ஜார்ஜியா வுல் (101) சதமடித்தார். அது அவரது 2வது ஒருநாள் போட்டி சதமாகும். லிட்ச்பீல்ட் தனது பங்கிற்கு 80 ரன்கள் அடிக்க ஆஸ்திரேலியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. தீப்தி மற்றும் கஷ்வி கௌதம் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்ட நாயகி ஜார்ஜியா வுல் – 101

3வது ஒருநாள் போட்டி ஹோபர்ட்டில் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா இந்திய அணியின் பந்துவீச்சை சிதைத்தது. அலைஸா ஹீலி 158, பெத் மோனி 106, ஜார்ஜியா வுல் 62 என அடிக்க ஆஸ்திரேலியா 409 ரன்களைக் குவித்தது. இந்தியா தரப்பில் ஸ்ரீசரணி 106 ரன்கள் கொடுத்தார்.

சேஸ் செய்த இந்திய அணியின் ஸ்னே ராணா 44 ரன்களும், ஜெமீமா 42 ரன்களும் அடித்தனர். இந்தியா 224 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அலனா கிங் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியா 185 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. தொடரையும் 3-0 என வென்றது. விக்கெட் கீப்பரான அலைஸா ஹீலி முதல் முறையாக சர்வதேசக் கிரிக்கெட்டில் பந்துவீசினார். 2 ஓவர்கள் வீசி விக்கெட் எதுவும் எடுக்கவில்லை.

ஆட்ட நாயகி - அலைஸா ஹீலி – 158

அலைஸா ஹீலி இந்தப் போட்டியோடு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

****

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

நியூசிலாந்து அணியின் டேவோன் கான்வே ஒரு போட்டியில் கூட ஆடவில்லை. சூப்பர் 8 சுற்றுக்கு வந்த அணிகளில் ஒரு போட்டியில் கூட ஆடாத ஒரே வீரர் கான்வே தான்.

கேப்டன்களும் காயங்களும்

2026 டி20 உலகக்கோப்பையில் காயமடைந்த கேப்டன்கள் பற்றி பார்ப்போம்.

முதல்முறையாக உலகக்கோப்பை ஆடிய இத்தாலி அணியின் கேப்டன் வெய்ன் மேட்சன், ஸ்காட்லாந்துக்கு எதிரான போட்டியில் பீல்டிங்கின்போது தோள்பட்டையில் காயமடைந்தார். அந்தப் போட்டியில் பேட்டிங் ஆட வரவில்லை. அதற்குப்பிறகு மற்றபோட்டிகளில் பென் மனென்டி கேப்டனாக செயல்பட்டார்.

ஆஸ்திரேலியக் கேப்டன் மிட்செல் மார்ஷ் ஜிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் டாஸ் போடுவதற்கு சற்றுமுன்பாகக் காயமடைந்தார். டிராவிஸ் ஹெட் கேப்டனாக செயல்பட்டார். கடைசி இரண்டு போட்டிகளுக்கு மார்ஷ் அணிக்குத் திரும்பினார்.

அயர்லாந்து கேப்டன் பால் ஸ்டிர்லிங், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பீல்டிங்கின்போது வலதுமுட்டியில் காயமடைந்தார். பேட்டிங் இறங்கிய ஸ்டிர்லிங் ஒருபந்தை மட்டுமே எதிர்கொண்ட நிலையில் முடியாமல் வெளியேறினார். மீதமிருந்த போட்டிகளுக்கு லோர்கன் டக்கர் கேப்டனாக செயல்பட்டார்.

நியூசிலாந்து அணி கேப்டன் மிட்செல் சாண்ட்னர், வயிற்று உபாதை காரணமாக கனடாவுக்கு எதிரான போட்டியில் ஆடவில்லை. டேவிட் மிட்செல் பொறுப்புக்கேப்டனாக செயல்பட்டார்.

ஜிம்பாப்வே கேப்டன் சிக்கந்தர் ரஸா, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சுளுக்கு காரணமாக வெளியேறினார். இறுதிக்கட்ட ஓவர்களில் ரியான் ப்ரூல் கேப்டனாக செயல்பட்டு வெற்றிக்கு அழைத்துச் சென்றார். வெஸ்ட் இண்டீஸ்க்கு எதிரான போட்டியில் பந்தை எதிர்கொண்டபோது ரஸா கையில் அடிபட்டது. அந்த ஓவரை முடித்து வெளியே சென்று பனிக்கட்டி ஒத்தடம் கொடுத்த ரஸா, பேட்டிங் செய்த வந்தார்.

டி20 போட்டி முடிவுகள்*

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா 3வது டி20, பிப்ரவரி 01, லாகூர்

பாகிஸ்தான் - 207/6	**ஆஸ்திரேலியா - 96**

பாகிஸ்தான் 111 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - முஹமது நவாஸ் - 5/18

இலங்கை - இங்கிலாந்து 2வது டி20, பிப்ரவரி 01, பல்லிகல்லே

இலங்கை - 189/5	**இங்கிலாந்து - 173/4**

இங்கிலாந்து 3 விக்கெட்டுகள்# வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டாம் பேண்டன் - 54*

இலங்கை - இங்கிலாந்து 3வது டி20, பிப்ரவரி 03, பல்லிகல்லே

இங்கிலாந்து - 128/9	**இலங்கை - 116**

இங்கிலாந்து 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சாம் கர்ரன் - 58

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 07, கொழும்பு

நெதர்லாந்து - 147	**பாகிஸ்தான் - 148/7**

பாகிஸ்தான் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பஹீம் அஷ்ரப் - 29*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 07, கொல்கத்தா

வெஸ்ட் இண்டீஸ் - 182/5	**ஸ்காட்லாந்து - 147**

வெஸ்ட் இண்டீஸ் 35 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷிம்ரன் ஹெட்மேர் - 64

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 07, மும்பை

இந்தியா - 161/9	**அமெரிக்கா - 132/8**

இந்தியா 29 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சூர்யகுமார் யாதவ் - 84*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 08, சென்னை

ஆப்கானிஸ்தான் - 182/6	**நியூஸிலாந்து - 183/5**

நியூஸிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டிம் செய்பிரட் - 65 & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 08, மும்பை

இங்கிலாந்து - 184/7	**நேபாள் - 180/6**

இங்கிலாந்து 4 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - வில் ஜாக்ஸ் - 39* & 1/17

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 08, கொழும்பு

இலங்கை - 163/6	**அயர்லாந்து - 143**

இலங்கை 20 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - கமிந்து மெண்டிஸ் - 44

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 09, கொல்கத்தா

ஸ்காட்லாந்து -207/4	**இத்தாலி - 134**

ஸ்காட்லாந்து 73 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - மைக்கேல் லீஸ்க் -22* & 4/17

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 09, கொழும்பு

ஓமன் -103	**ஜிம்பாப்வே - 106/2**

ஜிம்பாப்வே 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பிளஸ்ஸிங் முசாரபாணி - 3/16

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 09, அகமதாபாத்

தென் ஆப்பிரிக்கா - 213/4	**கனடா -156/8**

தென் ஆப்பிரிக்கா 57 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - லுங்கி நிகிடி - 4/31

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 10, டெல்லி

நமீபியா -156/8	**நெதர்லாந்து - 159/3**

நெதர்லாந்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பஸ் டீ லீடே - 2/20 & 72*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 10, சென்னை

எமிரேட்ஸ் - 173/6	**நியூஸிலாந்து - 175/0**

நியூஸிலாந்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டிம் செய்பிரட் - 89*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 10, கொழும்பு

பாகிஸ்தான் - 190/9	**அமெரிக்கா - 158/8**

பாகிஸ்தான் 32 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷாகிப்ஸடா பர்ஹான் -73

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 11, அகமதாபாத்

தென் ஆப்பிரிக்கா - 187/6	**ஆப்கானிஸ்தான் - 187**

தென் ஆப்பிரிக்கா இரண்டாவது சூப்பர் ஓவரில் வெற்றி.
ஆட்டநாயகன் - லுங்கி நிகிடி - 3/26

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 11, கொழும்பு

ஆஸ்திரேலியா - 182/6	**அயர்லாந்து - 115**

ஆஸ்திரேலியா 67 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - நாதன் எல்லிஸ் - 4/12

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 11, மும்பை

வெஸ்ட் இண்டீஸ் - 196/6	**இங்கிலாந்து - 166**

வெஸ்ட் இண்டீஸ் 30 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஸர்பைன் ரூதர்போர்ட் - 76*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 12, பல்லிகல்லே

இலங்கை - 225/5	**ஓமன் -120/9**

இலங்கை 105 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பவன் ரத்னாயகே - 60

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 12, மும்பை

நேபாள் - 123	**இத்தாலி - 124/0**

இத்தாலி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - கிரிஷன் கலுகமாகே - 3/18

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 12, டெல்லி

இந்தியா - 209/9	**நமீபியா -116**

இந்தியா 93 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஹர்திக் பாண்ட்யா - 52 & 2/21

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 13, கொழும்பு

ஜிம்பாப்வே - 169/2	**ஆஸ்திரேலியா - 146**

ஜிம்பாப்வே 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - பிளஸ்ஸிங் முசாரபாணி - 4/17

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 13, டெல்லி

கனடா -150/7	**எமிரேட்ஸ் - 151/5**

எமிரேட்ஸ் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -ஜுனைட் சித்திக் - 5/35

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 13, சென்னை

அமெரிக்கா - 196/6	**நெதர்லாந்து - 103**

அமெரிக்கா 93 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஹர்மீட் சிங் - 4/21

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 14, கொழும்பு

அயர்லாந்து - 235/5	**ஓமன் -139**

அயர்லாந்து 96 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - லோர்கன் டக்கர் - 94*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 14, கொல்கத்தா

ஸ்காட்லாந்து - 152	**இங்கிலாந்து - 155/5**

இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -டாம் பேண்டன் - 63* & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 14, அகமதாபாத்

நியூஸிலாந்து - 175/7	**தென் ஆப்பிரிக்கா - 178/3**

தென் ஆப்பிரிக்கா 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -மார்கோ யென்சென் - 4/40

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 15, மும்பை

நேபாள் - 133/8	**வெஸ்ட் இண்டீஸ் - 134/1**

வெஸ்ட் இண்டீஸ் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -ஜேசன் ஹோல்டர் - 4/27

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 15, சென்னை

அமெரிக்கா - 199/4	**நமீபியா -168/6**

அமெரிக்கா 31 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சஞ்சய் கிருஷ்ணமூர்த்தி - 68*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 15, கொழும்பு

இந்தியா - 175/7	**பாகிஸ்தான் - 114**

இந்தியா 61 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - இஷான் கிஷன் - 77

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 16, டெல்லி

எமிரேட்ஸ் - 160/9	**ஆப்கானிஸ்தான் - 162/5**

ஆப்கானிஸ்தான் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -அஸ்மத்துல்லா ஓமர்ஷாய் - 4/15 & 40*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 16, கொல்கத்தா

இங்கிலாந்து - 202/7	**இத்தாலி - 178**

இங்கிலாந்து 24 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - வில் ஜாக்ஸ் - 53* & 1/34

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 16, பல்லிகல்லே

ஆஸ்திரேலியா - 181 | **இலங்கை - 184/2**

இலங்கை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -பதும் நிஸ்சங்க - 100*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 17, சென்னை

கனடா -173/4 | **நியூஸிலாந்து - 176/2**

நியூஸிலாந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -க்ளென் பிலிப்ஸ் - 76* & 3 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 17, மும்பை

ஸ்காட்லாந்து - 170/7 | **நேபாள் - 171/3**

நேபாள் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -திபேந்திர சிங் ஏரீ - 50*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 18, டெல்லி

எமிரேட்ஸ் - 122/6 | **தென் ஆப்பிரிக்கா - 123/4**

தென் ஆப்பிரிக்கா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் -கார்பின் போஸ்ச் - 3/12

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 18, கொழும்பு

பாகிஸ்தான் - 199/3 | **நமீபியா - 97**

பாகிஸ்தான் 102 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷாகிப்ஸடா பர்ஹான் - 100*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 18, அகமதாபாத்

இந்தியா - 193/6 | **நெதர்லாந்து - 176/7**

இந்தியா 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷிவம் துபே - 66 & 2/35

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 19, கொல்கத்தா

வெஸ்ட் இண்டீஸ் - 165/6 | **இத்தாலி - 123**

வெஸ்ட் இண்டீஸ் 42 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷாய் ஹோப் - 75 & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 19, கொழும்பு

இலங்கை - 178/7 | **ஜிம்பாப்வே - 182/4**

ஜிம்பாப்வே 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - சிக்கந்தர் ரஸா - 45

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 19, சென்னை

ஆப்கானிஸ்தான் - 200/4	**கனடா -118/8**

ஆப்கானிஸ்தான் 82 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - இப்ராஹிம் சத்ரான் - 95*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 20, பல்லிகல்லே

ஓமன் -104	**ஆஸ்திரேலியா - 108/1**

ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஆடம் ஸாம்பா - 4/21

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 21, கொழும்பு

பாகிஸ்தான்	**நியூஸிலாந்து**

முடிவு இல்லை

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 22, பல்லிகல்லே

இங்கிலாந்து - 146/9	**இலங்கை - 95**

இங்கிலாந்து 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - வில் ஜாக்ஸ் - 21 & 3/22

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 22, அகமதாபாத்

தென் ஆப்பிரிக்கா - 187/7	**இந்தியா - 111**

தென் ஆப்பிரிக்கா 76 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - டேவிட் மில்லர் - 63

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 23, மும்பை

வெஸ்ட் இண்டீஸ் - 254/6	**ஜிம்பாப்வே - 147**

வெஸ்ட் இண்டீஸ் 107 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷிம்ரன் ஹெட்மேர் - 85 & 2 கேட்ச்கள்

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 24, பல்லிகல்லே

பாகிஸ்தான் -164/9	**இங்கிலாந்து - 166/8**

இங்கிலாந்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஹாரி புரூக் - 100

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 25, கொழும்பு

நியூஸிலாந்து - 168/7	**இலங்கை - 107/8**

நியூஸிலாந்து 61 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ரச்சின் ரவீந்திரா - 32 & 4/27

டி20 போட்டி முடிவுகள்*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 26, அகமதாபாத்

வெஸ்ட் இண்டீஸ் - 176/8	**தென் ஆப்பிரிக்கா - 177/1**

தென் ஆப்பிரிக்கா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஏய்டன் மார்க்ரம் - 82*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 26, சென்னை

இந்தியா - 254/6	**ஜிம்பாப்வே - 184/6**

இந்தியா 72 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஹர்திக் பாண்ட்யா - 50*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 27, கொழும்பு

நியூஸிலாந்து - 159/7	**இங்கிலாந்து - 161/6**

இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - வில் ஜாக்ஸ் - 2/23 & 32*

டி20 உலகக்கோப்பை, பிப்ரவரி 28, பல்லிகல்லே

பாகிஸ்தான் -212/8	**இலங்கை - 207/6**

பாகிஸ்தான் 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி.
ஆட்டநாயகன் - ஷாகிப்ஸடா பர்ஹான் - 100

*முக்கிய அணிகளின் போட்டி மட்டுமே காப்பட்டுள்ளது

மகளிர் உலகக்கோப்பைத் தகுதிச்சுற்று

வரும் ஜூன் - ஜூலையில் நடைபெறும் உலகக்கோப்பையில் எட்டு அணிகள் நேரடியாகத் தகுதிபெற்றுவிட மீதமுள்ள நான்கு இடங்களுக்குத் தகுதிச்சுற்றுப் போட்டிகள் ஜனவரி 18 முதல் பிப்ரவரி 1 வரை நடைபெற்றன.

ஏ பிரிவில் பங்களாதேஷ், அயர்லாந்து, அமெரிக்கா, பப்புவா நியூ கினி, நமீபியா அணிகள் இருந்தன.

பி பிரிவில் நெதர்லாந்து, ஸ்காட்லாந்து, தாய்லாந்து, நேபாள் மற்றும் ஜிம்பாப்வே அணிகள் இருந்தன.

முதல் சுற்றில் ஏ பிரிவில் பப்புவா நியூ கினி & நமீபியா அணிகளும், பி பிரிவில் நேபாள் & ஜிம்பாப்வே அணிகளும் வெளியேறின. மற்ற அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேறின.

சூப்பர்சுற்று முடிவில் பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்து அணிகள் உலகக்கோப்பைக்குத் தகுதிபெற்றன. பங்களாதேஷ் அணி தாங்கள் ஆடிய அனைத்துப் போட்டிகளிலும் வென்றது.

அதிக ரன்கள் அடித்த வீராங்கனைகள்

- ✓ கேபி லூயிஸ் (அயர்லாந்து) - 276
- ✓ ஷோபனா மோஸ்டரி (பங்களாதேஷ்) - 262
- ✓ நருவேமோல் சாய்வாய் (தாய்லாந்து) - 205
- ✓ ஷர்மின் அக்தெர் (பங்களாதேஷ்) - 195

✓ கேத்ரின் பிரேசர் (ஸ்காட்லாந்து) – 168

அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீராங்கனைகள்

✓ டாரா நோரிஸ் (அமெரிக்கா) - 15

✓ அர்லீன் கெல்லி (அயர்லாந்து) - 13

✓ திபாட்சா புத்தவோங் (தாய்லாந்து) - 13

✓ கேத்ரின் புரூஸ் (ஸ்காட்லாந்து) -12

✓ ஜானே மகுய்ரே (அயர்லாந்து) – 11

உலகக்கோப்பை சுவாரஸ்யங்கள்

ஆஸ்திரேலிய அணியின் ஹேசல்வுட் காயமடைந்து வெளியேறியபிறகு மாற்றுவீரர் குறித்து எதுவும் சொல்லவில்லை. இந்நிலையில் கேப்டன் மார்ஷ் காயத்தால் அவதிப்பட, ஸ்டீவன் ஸ்மித் மாற்றுவீரராக இலங்கைக்கு வந்தார். மார்ஷ் காயத்தில் இருந்து மீண்டு விளையாட, ஆஸ்திரேலிய நிர்வாகம் ஸ்மித் ஹேசல்வுட்டின் மாற்றுவீரர் என அறிவித்தது. ஆனால் ஸ்மித் ஒரு போட்டியில் கூட ஆடவில்லை, ஆஸ்திரேலியா அடுத்த சுற்றுக்கும் செல்லவில்லை.

மைல் கல்லை எட்டியவர்கள்

	வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஆல்ரவுண்டர் ஜேசன் ஹோல்டர் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்..	100
1000	ஆப்கானிஸ்தான் அணியின் குல்பதீன் நயீப் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	நியூசிலாந்து அணியின் விக்கெட் கீப்பர் டிம் செய்பிரட் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
1000	பாகிஸ்தான் அணியின் துவக்க வீரர் ஷாகிப்ஸடா பர்ஹான் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	ஜிம்பாப்வே அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிளஸ்ஸிங் முசாரபானி சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100

மைல் கல்லை எட்டியவர்கள்

	ஆஸ்திரேலிய அணியின் ஆல்ரவுண்டர் மார்க்கஸ் ஸ்டோய்னிஸ் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50
50	இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	இங்கிலாந்து அணியின் விக்கெட் கீப்பர் ஜாஸ் பட்லர் சர்வதேச டி20 போட்டிகளில் 4000 ரன்களைக் கடந்தார்.	4000
3000	தென்னாப்பிரிக்க அணியின் குயின்டன் டீ காக் சர்வதேச டி20 போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	
	ஆப்கானிஸ்தான் அணியின் ஆல்ரவுண்டர் அஸ்மத்துல்லா ஓமர்சாய் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50

மைல் கல்லை எட்டியவர்கள்

	நேபாள் அணியின் ஆல்ரவுண்டர் தீப்பேந்திர சிங் எர்ரீ சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	2000
1000	ஆஸ்திரேலிய அணியின் விக்கெட் கீப்பர் ஜோஷ் இங்லிஷ் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	ஆஸ்திரேலிய அணியின் ஆல்ரவுண்டர் க்ளென் மேக்ஸ்வெல் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50
2000	நியூசிலாந்து அணியின் மார்க் சாப்மேன் சர்வதேச டி20 போட்டிகளில் 2000 ரன்களைக் கடந்தார்.	
	ஆஸ்திரேலிய அணியின் பெத் மூனி ஒருநாள் போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000

மைல் கல்லை எட்டியவர்கள்

	ஆஸ்திரேலிய அணியின் ஆல்ரவுண்டர் அனபெல் சதர்லேண்ட் ஒருநாள் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000
1000	பாகிஸ்தான் அணியின் ஆல்ரவுண்டர் சதாப் கான் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	பாகிஸ்தான் அணியின் ஆல்ரவுண்டர் முகமது நவாஸ் சர்வதேச டி20 போட்டிகளில் தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.	100
1000	நியூசிலாந்து அணியின் கேப்டன் மிட்செல் சாண்ட்னர் சர்வதேச டி20 போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	ஜிம்பாப்வே அணியின் கேப்டன் சிக்கந்தர் ரஸா சர்வதேச டி20 போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000

மைல் கல்லை எட்டியவர்கள்

	தென்னாப்பிரிக்க அணியின் சன்னே லூஸ் ஒருநாள் போட்டிகளில் 3000 ரன்களைக் கடந்தார்.	3000
6000	வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஸ்டபெயின் டெய்லர் ஒருநாள் போட்டிகளில் 6000 ரன்களைக் கடந்தார்.	
	பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அப்ரார் அகமது சர்வதேச டி20 போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50

துளிகள்

ஆப்கானிஸ்தான் அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக ரிச்சர்ட் பைபஸ் நியமிக்கப்பட்டுள்ளார். டி20 உலகக் கோப்பையோடு ஜோனதன் டிராட்டின் பதவிக்காலம் முடிந்தது.

MIS

Mahalakshmi Investment Services
M S RAMASUBRAMANIAN
MOBILE: 9894458655
Email: ramasubbums@gmail.com
Website: http://p.njw.bz/30935

M S RAMASUBRAMANIAN - AMFI REGISTERED MUTUAL FUND DISTRIBUTOR

உலகக்கோப்பை சூப்பர் 8

நியூசிலாந்து - பாகிஸ்தான்:

வருணபகவான் வளைத்த முதல் போட்டி

பாகிஸ்தான் டாஸ் வென்று முதலில் பேட் செய்ய முடிவு செய்தது. தொடர் மழையால் இரு அணிகளுக்கும் ஒரு புள்ளி கிடைத்தது.

இலங்கை - இங்கிலாந்து:

ஜேக்ஸின் பவர்ப்ளே

இங்கிலாந்து பில் சால்ட் அரைசதத்தால் 146 ரன்களை எட்டியது. வெல்லாகே 3 விக்கெட்டுகளையும், தீக்சான & மதுஷ்க தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். வில் ஜாக்ஸை பவர்ப்ளேவில் பந்துவீச வைத்தார் ஹாரி புரூக். ஜாக்ஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்த ஆட்டம் இங்கிலாந்து வசம் வந்தது. போராடிய இலங்கை கேப்டன் ஷானக 30 ரன்கள் அடித்தார். இலங்கை 95 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஆர்ச்சர், ரஷீத், டாஸன் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இங்கிலாந்து 51 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா - தென்னாப்பிரிக்கா:

மில்லரின் அதிரடி

20 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்த தென்னாப்பிரிக்கா, பிரிவிஸ் 45, மில்லர் 63, ஸ்டப்ஸ் 44 பங்களிப்பால் 187 ரன்களை எட்டியது. பும்ரா சிறப்பாகப் பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சேஸ் செய்த இந்திய அணியின் பலவீனங்களைப் பயன்படுத்தி சிறப்பாகப் பந்துவீசியது தென்னாப்பிரிக்கா. யென்சென் 4 விக்கெட்டுகளையும், மகராஜ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். அதிகபட்சமாக ஷிவம் துபே 42 ரன்கள் அடித்தார். தென்னாப்பிரிக்கா 76 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

வெஸ்ட் இண்டீஸ் - ஜிம்பாப்வே:

வாணவேடிக்கை காட்டிய ஹெட்மேர்

ஷிம்ரன் ஹெட்மேர் 34 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 7 ஃ போர்கள் உட்பட 85 ரன்கள் அடித்தார். ராவ்மென் பவல் தனது பங்காக 59 ரன்கள் அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் 254 ரன்களைக் குவித்தது. வெஸ்ட் இண்டீஸின் சுழற்பந்துவீச்சாளர்கள் குடகேஸ் மோட்டி 4 விக்கெட்டுகளையும், அக்கேல் ஹொசைன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ஜிம்பாப்வே 147 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. வெஸ்ட் இண்டீஸ் 107 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - பாகிஸ்தான்:

தலைவனின் அதிரடி காட்டிய ஹாரி புரூக்

ஷாகிப்ஸடா பர்ஹான் 63 ரன்கள் அடிக்க, மற்றவர்கள் சிறிய அளவில் பங்களிக்க பாகிஸ்தான் 164 ரன்களை எட்டியது. லியாம் டாஸன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சேஸ் செய்த இங்கிலாந்து அணியின் துவக்கவீரர் பில் சால்ட் முதல் பந்திலே அவுட்டாக, 2வது பந்திலே களமிறங்கினார் ஹாரி புரூக். ஒரு முனையில் விக்கெட்டுகள் விழுந்தாலும் ஹாரி புரூக் 51 பந்துகளில் 100 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. ஷாகின் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை - நியூசிலாந்து:

கரை சேர்த்த சாண்ட்னர் - மெக்கொஞ்சி இணை

நியூசிலாந்து 84 ரன்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. கேப்டன் சாண்ட்னர் (47), மெக்கொஞ்சியோடு (31) இணைந்து சரிவில் இருந்து மீட்டு இலங்கைக்கு இலக்கு 169 என நிர்ணயித்தார். தீக்சான மற்றும் துஷ்மந்த சமீர தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சேஸ் செய்த இலங்கை அணி மெதுவாக ஆட ரன்ரேட் அழுத்தம் விக்கெட்டுகளாக மாற 20 ஓவர்களில் 108 ரன்களை

மட்டுமே எடுத்தது. ரச்சின் ரவீந்திரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நியூசிலாந்து 61 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

தென்னாப்பிரிக்கா - வெஸ்ட் இண்டீஸ்:

ஷெப்பர்டின் அதிரடி, மார்க்ரமின் பதிலடி

வெஸ்ட் இண்டீஸின் டாப் ஆர்டர் பேட்டர்கள் சொதப்ப, ஜேசன் ஹோல்டர் 49, ரோமரியோ ஷெப்பர்ட் 52* பங்களிப்பால் 176 ரன்களை எடுத்தது. நிகிடி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். குயின்டன் டீகாக் 47, மார்க்ரம் 82*, ரிக்கெல்டன் 45* என அதிரடி காட்ட தென்னாப்பிரிக்கா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தியா - ஜிம்பாப்வே:

வீணாய்ப்போன பென்னட் ஆட்டம்

இந்திய பேட்டர்கள் அனைவரும் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்த இந்தியா 256 ரன்கள் குவித்தது. அபிஷேக் சர்மா 55 ரன்களும், ஹர்திக் பாண்ட்யா 50* ரன்களும் அடித்தனர். சேஸ் செய்த ஜிம்பாப்வே அணியின் பென்னட் 97 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மறுமுனையில் போதுமான ஆதரவு கிடைக்காததால் ஜிம்பாப்வே 184 ரன்கள் எடுத்தது. இந்தியா 72 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - நியூசிலாந்து:

மீண்டும் ஜாக்ஸின் ஆல்ரவுண்ட்

இங்கிலாந்து சுழற்பந்துவீச்சாளர்கள் அடில் ரஷீத், வில் ஜாக்ஸ், ரீகன் அகமது தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்த நியூசிலாந்து 159 ரன்கள் எடுத்தது. நியூசிலாந்தும் சுழற்பந்தை ஆயுதமாகப் பயன்படுத்தியது. அதுவே பின்னடைவைத் தர, இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

அதிகபட்சமாக பேன்டன் 33 ரன்களும், வில் ஜாக்ஸ் 32* ரன்களும் அடித்தனர். ரச்சின் ரவீந்திரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை - பாகிஸ்தான்:

அதிரடி காட்டிய பர்ஹானும், ஷானகவும்

பாகிஸ்தான் நல்ல ரன்ரேட்டில் வென்றால் அரையிறுதிக்கு செல்ல வாய்ப்பு. அணியில் சில மாற்றங்களுடன் களமிறங்கியது. துவக்கவீரர்கள் இணை 176 ரன்கள் குவித்து உலக சாதனை படைத்தது. பக்கர் ஸமான் 84 ரன்கள் அடித்தார். பர்ஹான் (100) சதமடித்து ஆட்டமிழந்தார். வேறு யாரும் பெரிய அளவில் ஆடாததால் பாகிஸ்தான் 212 ரன்கள் எடுத்தது. தில்ஷன் மதுஷ்க 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை எடுத்தது. பவன் ரத்னாயகே (58) - தசுன் ஷானக இணை பாகிஸ்தானின் அரையிறுதி வாய்ப்பைக் கலைத்தன. ஷானக அதோடு நிறுத்தவில்லை. வெற்றி பெற அதிரடியாக ஆடினார். கடைசி ஓவரில் ஹாட்ரிக் சிக்ஸ் அடித்தார். ஒருவேளை கடைசிப்பந்தை அம்பயர் வைடு என அறிவித்து இருந்தால் இலங்கை வெற்றி பெற்றிருக்கலாம். பாகிஸ்தான் 5 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. அப்ரார் அகமது 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். தசுன் ஷானக 31 பந்துகளில் 76 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தென்னாப்பிரிக்கா - ஜிம்பாப்வே:

பேட்டிங் & பவுலிங்கில் கலக்கிய ரஸா

கேப்டன் ரஸாவின் அரைசதத்தால் (73) ஜிம்பாப்வே 153 ரன்களை எட்டியது. கார்பின் போஸ்ச் & கவீனா மபாகா தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். சிறிய இலக்கைத் துரத்திய தென்னாப்பிரிக்காவின் 3 முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தினார் சிக்கந்தர் ரஸா. 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது தென்னாப்பிரிக்கா.

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ்:

வெஸ்ட் இண்டீஸை வெளியேற்றிய சேட்டன் சாம்சன்

கிட்டத்தட்ட காலிறுதிப்போட்டி என்பதால் வெஸ்ட் இண்டீஸ் காட்டடி அடித்து 195 ரன்களைக் குவித்தது. அதிகபட்சமாக ராஸ்டன் சேஸ் 40 ரன்கள் அடித்தார். பெரிய இலக்கைத் துரத்த சஞ்சு சாம்சன் (97*) அடித்தளம் அமைத்ததோடு, அசராமல் களத்தில் நின்று வெற்றியைத் தேடித்தந்தார். ஜேசன் ஹோல்டர் & ஷமர் ஜோசப் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இந்தியா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

****

கிரிக்கெட் சர்ச்சை

2011ல் நாட்டிங்காமில் நடைபெற்ற இங்கிலாந்து - இந்தியா டெஸ்டில் இயான் பெல் ரன்அவுட் சர்ச்சை ஆனது.

நடந்தது என்ன:

நாட்டிங்காம் டெஸ்டில் 3வது நாளில் இங்கிலாந்து 2வது இன்னிங்சை ஆடியது. இயான் பெல் மற்றும் இயான் மோர்கன் களத்தில் நின்றனர். தேநீர் இடைவேளைக்கு முன்பான கடைசிப்பந்தை மோர்கன் அடிக்க, பந்து எல்லைக்கோட்டைத் தொட்டுவிட்டது என நினைத்தனர் பேட்டர்கள். பந்து எல்லைக்கோட்டைத் தொடவில்லை. பிரவீன் குமார் எடுத்து எறிய, அபினவ் முகுந்த் ஸ்டம்பில் அடித்தார்.

பெல் தேநீர் இடைவேளைக்கு செல்ல வெளியே வந்ததால் கிரீஸில் இல்லை. 3வது நடுவரின் தீர்ப்புக்குப் போக, பில்லி பௌடன் அதைப் பார்த்துவிட்டு பந்து டெட்பால் ஆகவில்லை என்பதால் விதிமுறைப்படி அவுட் என அறிவித்தார்.

இடைவேளையின் போது, இங்கிலாந்து கேப்டன் ஸ்டிராஸ் மற்றும் பயிற்சியாளர் ஆன்டி பிளவர், இந்தியக் கேப்டன் தோனியை சந்தித்துப் பேசினர். தோனியும் கிரிக்கெட்டின் உன்னதத்தைக் கெடுக்கவேண்டாம் என்று அந்த அப்பீலைத் திரும்பப்பெற, பெல் மீண்டும் வந்து ஆடினார். அந்த டெஸ்டில் இந்திய அணி தோற்றது.

அலசல் :

பெல் அவுட்டைத் திரும்பப்பெற்றதால் மட்டுமே இந்திய அணி தோற்கவில்லை. ஏனெனில் இந்தியா பெரிய இலக்கை சேஸ் செய்யமுடியாமல் தோற்றது. அதே சமயம் பேட்டர்களுக்குப் போட்டி விழிப்புணர்வு இருந்திருக்க வேண்டும். ஒருவேளை இந்திய அணி அப்பீலைத் திரும்பப்பெறவில்லை என்றால் ஆங்கில ஊடகங்கள் இந்திய அணி தவறு செய்ததாக எழுதி இருப்பார்கள்.

லெஜண்ட்ஸ் ப்ரோ டி20

ஓய்வுபெற்ற வீரர்கள் பங்கேற்ற லெஜண்ட்ஸ் ப்ரோ டி20 தொடர் ஜனவரி 26 முதல் பிப்ரவரி 4 வரை கோவாவில் நடைபெற்றது.

ஹர்பஜன் சிங் தலைமையில் டெல்லி வாரியர்ஸ், இயான் மோர்கன் தலைமையில் ராஜஸ்தான் லயன்ஸ், ஷேன் வாட்சன் தலைமையில் புனே பேந்தர்ஸ், ஷிகர் தவான் தலைமையில் துபாய் ராயல்ஸ், கார்லஸ் பிராத்வெயிட் தலைமையில் மஹாராஷ்டிரா டைகூன்ஸ் மற்றும் திசாரா பெரீரா தலைமையில் குருகிராம் தண்டர்ஸ் என ஆறு அணிகள் பங்கேற்றன.

ஒவ்வொரு அணியும் 5 லீக் போட்டிகளில் ஆடின. மஹாராஷ்டிரா டைகூன்ஸ் மற்றும் குருகிராம் தண்டர்ஸ் அணிகள் ஒரு போட்டியில் மட்டுமே வென்றதால் அரையிறுதிக்கு செல்லவில்லை.

அரையிறுதி 1

ராஜஸ்தான் லயன்ஸ் - 213/6

ஏஞ்சலோ பெரீரா - 96

வெயின் பிராவோ - 2/43

புனே பேந்தர்ஸ் - 217/4

ஷமியுல்லா ஷின்வாரி - 53*

சதாப் ஜகாதி - 2/27

புனே பேந்தர்ஸ் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்டநாயகன் - ஷமியுல்லா ஷின்வாரி - 53*

அரையிறுதி 2

துபாய் ராயல்ஸ் - 192/7

ஷிகர் தவான் - 71

ஹர்பஜன் சிங் - 2/22

டெல்லி வாரியர்ஸ் - 176/7

ஸ்ரீவாட்ஸ் கோஸ்வாமி - 44

பியூஷ் சாவ்லா - 3/25

துபாய் ராயல்ஸ் 16 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்டநாயகன் - ஷிகர் தவான் - 71

இறுதிப்போட்டி

புனே பேந்தர்ஸ் - 194/4

மார்டின் கப்தில் - 62

பியூஷ் சாவ்லா - 2/42

துபாய் ராயல்ஸ் - 197/2

மன்விந்தர் பிஸ்லா - 67

அங்கித் ராஜ்புட் - 1/27

துபாய் ராயல்ஸ் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது

ஆட்டநாயகன் - ஷிகர் தவான் - 64

அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

மார்ட்டின் கப்தில் - 317

ஷிகர் தவான் - 267

உபுல் தாரங்க - 240

காட்விக் வால்டன் - 235

சட்டேஸ்வர் புஜாரா - 207

அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள்

பியூஷ் சாவ்லா - 15

சுபோத் ஃபாட்டி - 12

சதாப் ஜகாதி - 10

வெயின் பிராவோ - 8

பிபுல் சர்மா - 8

தென்னாப்பிரிக்கா - பாகிஸ்தான் (மகளிர்)

பாகிஸ்தான் அணி தென்னாப்பிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் ஆடியது.

முதல் டி20 போட்டி, போர்ட்செப்ஸ்ட்ரூம் நகரில் நடைபெற்றது. பாகிஸ்தான் அணி முதலில் பேட்டிங் செய்தது. பாகிஸ்தான் கேப்டன் பாத்திமா சனா 8வது வீரராகக் களமிறங்கி 90* ரன்கள் அடித்தார். 8வதாகக் களமிறங்கி அதிக ரன்கள் குவித்த வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார். ஆனால் வேறு யாரும் பெரிய அளவில் ஆடவில்லை. அயன்டா ஹுலுபி 3 விக்கெட்டுகளையும், கய்லா ரெய்னாகே & நான்குலுலேகோ லபா தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தென்னாப்பிரிக்கக் கேப்டன் லாரா வோல்வார்ட் அரைசதம் (61) அடித்தார். தென்னாப்பிரிக்கா 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. நஸ்ரா சந்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அறிமுக வீராங்கனை கய்லா ரெய்னாகே ஆட்டநாயகி ஆனார்.

2வது டி20 பெனோனி நகரில் நடைபெற்றது. மழை காரணமாக 14 ஓவர்கள் நடைபெற்றது. பாகிஸ்தான் 100 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக அலியா ரியாஸ் 20 ரன்கள் அடித்தார். உதிரிகளில் 15 ரன்கள் கிடைத்தது. அபயோங்கா காகா 3 விக்கெட்டுகளையும், மசபடா க்ளாஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். தென்னாப்பிரிக்கா 13.2 ஓவர்களில் இலக்கை எட்டியது. லாரா வோல்வார்ட் 40* ரன்களும், டாஸ்பின் பிரிட்ஸ் 29 ரன்களும் அடித்தனர். சாதியா இக்பால் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

3வது டி20 பெனோனி நகரில் நடைபெற்றது. தொடரை இழந்துவிட்ட பாகிஸ்தான் அணியின் துவக்க வீராங்கனைகள் ரன் எதுவும் எடுக்கவில்லை. கேப்டன் பாத்திமா சனா 47* ரன்கள் அடித்தார். சிட்ரா அமின் மற்றும் அலியா ரியாஸ் தலா 26 ரன்கள் அடித்தனர். பாகிஸ்தான் 144 ரன்கள் எடுத்தது.

தென்னாப்பிரிக்கா அணி 91 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அன்னெரி டெரிக்சன் 30 ரன்களும், நடினே டீ கிளார்க் 27 ரன்களும் அடித்தனர். சாதியா இக்பால் 3 விக்கெட்டுகளையும், பாத்திமா சனா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பாகிஸ்தான் 53 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. பாத்திமா சனா ஆட்ட நாயகி மற்றும் தொடர் நாயகி ஆனார்.

இளையோர் உலகக்கோப்பை

1988 ல் தொடங்கப்பட்ட U19 ஆடவர் ஒருநாள் உலகக்கோப்பைத் தொடர் 2026ல் 16வது முறையாக நடைபெற்றது. முதல் தொடருக்குப் பின்பே 16 அணிகள் பங்குபெறுவது என்பது வழக்கமாக உள்ளது. இந்தமுறை இந்தத் தொடர் ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவில் நடைபெற்றது.

இந்தியா, பங்களாதேஷ், யு.எஸ்.ஏ, நியூசிலாந்து, ஜிம்பாப்வே, பாகிஸ்தான், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, ஜப்பான், இலங்கை, ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், ஆப்கானிஸ்தான், தென்னாப்பிரிக்கா, தன்ஷானியா ஆகிய 16 நாடுகளின் U19 அணிகள் பங்குபெற்றன. நான்கு குழுக்களாக நடந்த முதல் சுற்றின் முடிவில் புள்ளிப் பட்டியல்.

குழு A:

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
ஆஸ்திரேலியா	3	3	0	0	6
இலங்கை	3	2	1	0	4
அயர்லாந்து	3	1	2	0	2
ஜப்பான்	3	0	3	0	0

குழு B:

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
இந்தியா	3	3	0	0	6
பங்களாதேஷ்	3	1	1	1	3
நியூசிலாந்து	3	0	1	2	2
யு.எஸ்.ஏ	3	0	2	1	1

குழு C:

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
இங்கிலாந்து	3	3	0	0	6
பாகிஸ்தான்	3	2	1	0	4
ஜிம்பாப்வே	3	0	2	1	1
ஸ்காட்லாந்து	3	0	2	1	1

குழு D:

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
ஆப்கானிஸ்தான்	3	3	0	0	6
மே.இ.தீ	3	2	1	0	4
தெ.ஆ	3	1	2	0	2
தன்ஷானியா	3	0	3	0	0

இவ்வாறாக நான்கு குழுக்களில் நடைபெற்ற முதல்சுற்றில் ஒவ்வொரு குழுவில் இருந்தும் புள்ளிப்பட்டியலில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றன. குழு 1 ல் A & D குழுவைச் சேர்ந்த ஆறு அணிகளும், குழு 2 ல் B & C குழுவைச் சேர்ந்த ஆறு அணிகளும் இடம்பெற்றிருந்தன. இந்த சூப்பர் 6 சுற்றின் புள்ளிப்பட்டியல்

குழு 1:

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
ஆஸ்திரேலியா	4	4	0	0	8
ஆப்கானிஸ்தான்	4	3	1	0	6
இலங்கை	4	3	1	0	6
மே.இ.தீ	4	2	2	0	4
தென்னாப்பிரிக்கா	4	0	4	0	0
அயர்லாந்து	4	0	4	0	0

குழு 2 :

அணிகள்	போட்டி	வெற்றி	தோல்வி	முடிவு இல்லை	புள்ளிகள்
இந்தியா	4	4	0	0	8
இங்கிலாந்து	4	4	0	0	8
பாகிஸ்தான்	4	2	2	0	4
பங்களாதேஷ்	4	1	2	1	3
நியூசிலாந்து	4	0	3	1	1
ஜிம்பாப்வே	4	0	4	0	0

இவ்வாறாக இரண்டாவது சுற்றின் முடிவில் முதல் இரு அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தேர்வாகின. இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்கு முன்னேறின.

முதல் அரையிறுதி:

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா இடையேயான முதல் அரையிறுதிப் போட்டி புலவாயோ மைதானத்தில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அணித்தலைவர் தாமஸ் ரெவ்-ன் சதத்துடன் 110 (104), 277 ரன்களைக் குவித்தது. 278 என்ற இலக்குடன் களம் இறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு ஒருபுறம் அணித்தலைவர் 100 ரன்களை 88 பந்துகளுக்கு அடித்தும் மறு முனையில் சரியான துணை இல்லாததால் 47.3 ஓவர்களில் 250 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 27 ரன்களில் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து அணித்தலைவர் தாமஸ் ரெவ் **- 110 (104)** ஆட்டநாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**.**

இரண்டாவது அரையிறுதி:

ஆசியக்கண்டத்தைச் சேர்ந்த இரு அணிகளான இந்தியா-ஆப்கானிஸ்தான் பலப்பரிட்சை. முதலில் பேட் செய்த ஆப்கான் அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 310 ரன்களைக் குவித்தது. ஃபைசல் & உஷாரியுல்லா இருவரும் சதம் விளாசினர். அரையிறுதி, 300+ இலக்கு என்ற ஒருவிதமான அழுத்தத்துடன் களம் இறங்கிய இந்திய அணிக்குத் தொடக்கமே அற்புதமாக அமைந்தது. வைபவ் சூர்யவன்ஷியின் அதிரடித் தொடக்கம், ஆரன் ஜார்ஜின் நிதானம், ஆயுஷ் மாத்ரேயின் அட்டகாசம் என 41.1 ஓவரில் 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது. மூன்று விக்கெட் பார்ட்னர்ஷிப்பும் 90 ரன்களை எட்டியிருந்தது.

இந்திய அணியின் ஆரோன் ஜார்ஜ் **- 115 (104)** ஆட்டநாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**.**

இறுதிப் போட்டி:

இரண்டாவது முறையாக இங்கிலாந்து கோப்பையை வெல்லுமா அல்லது ஆறாவது முறையாக இந்தியா கோப்பையை வெல்லுமா எனும் பெரும் எதிர்பார்ப்பிற்கு நடுவில் இறுதிப்போட்டி. இரு அணிகளும் தொடரில் ஒரு போட்டியில் கூட தோல்வியை சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹராரே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்தது. அரையிறுதியில் சதம் அடித்த ஆரோன் ஜார்ஜ் 9 ரன்களில் ஆட்டமிழந்து இந்திய ரசிகர்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தார். ஆனால் கடந்த ஓராண்டாக அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த வைபவ் சூர்யவன்ஷியின் ருத்ரதாண்டவம் அந்தப் பேரதிர்ச்சியிலிருந்து மீட்டது. அணித்தலைவர் ஆயுஷ் மாத்ரேயுடன் இணைந்து 80 பந்துகளில் 175 ரன்களை விளாசி அருமையான அடித்தளத்தை அமைத்துவிட்டார். 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 411/9, இறுதிப்போட்டியில் இமாலய இலக்கை நிர்ணயித்தது.

412 ஐ நோக்கிக் களம் இறங்கிய இங்கிலாந்து அணிக்குத் தொடக்கம் சரியாக அமையவில்லை. கில்லன் படேல், அம்ப்ரிஷ் பந்துவீச்சில் தொடக்க வீரர்கள் விக்கெட்களை இழந்தனர். நடுவரிசை வீரர் காலிப் பால்கனர் தனி ஆளாகப் போராடியும் 115 (67), மறுமுனையில் அவருக்கு யாரும் துணையில்லாத காரணத்தால் இங்கிலாந்து 40.2 ஓவர்களில் 311 எடுத்து, அனைத்து விக்கெட்களையும் இழந்து 100 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய அணி ஆறாவது முறையாக U19 உலகக்கோப்பையை வென்று வரலாறு படைத்தது**.**

ஆட்டநாயகன் & தொடர் நாயகன் - வைபவ் சூர்யவன்ஷி.

வைபவ் சூர்யவன்ஷியின் பயமில்லா அதிரடி ஆட்டம் ரசிகர்களிடையே பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 14 வயது சிறுவன் பந்துவீச்சாளார்களை நாலாப்பக்கமும் துவம்சம் செய்து இந்த உலகக்கோப்பையை இந்தியா வெல்ல முக்கியப் பங்காற்றியுள்ளார். ஆரோன் ஜார்ஜ், விஹான் மல்கோத்ரா, அபிஹ்யான் குண்டு, ஆயுஷ் மாத்ரே பேட்டிங் பங்களிப்பு, ஹெனில் பட்டேல், அம்ரிஷ், கில்லான் பட்டேல் பந்துவீச்சு பங்களிப்பு என அணியாக இந்தியாவின் வரலாற்று வெற்றிக்குப் பெரிதும் உதவியது.

இந்தத் தொடரில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள்:

1. பென் மேயர்ஸ் (இங்கிலாந்து) - 444

2. வைபவ் சூர்யவன்ஷி (இந்தியா) - 439

3. ஃபைசல் சினோஷ்டா (ஆப்கானிஸ்தான்) – 435

அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்:

1. மேனி லம்ஸ்டன் (இங்கிலாந்து) - 16

2. ஒமர்சாய் (ஆப்கானிஸ்தான்) - 14

3. அலி ராசா (பாகிஸ்தான்) - 13

இந்தத் தொடரில் பல இளம் வீரர்களின் பங்களிப்பு சிறப்பாக இருந்தது. விரைவில் அவர்களது நாட்டின் சீனியர் அணியில் அவர்களுக்கான வாய்ப்பு கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அதிரடி, நிதானம், போட்டிநிலை அறிந்து செயல்படல் என்று இந்த சிறுவயதில் சிறப்பாக செயல்பட்ட பல வீரர்களை இந்தத் தொடரில் பார்க்க இயன்றது.

மகளிர் ப்ரீமியர் 2026

2023ல் தொடங்கிய மகளிர் ப்ரீமியர் லீக்ன் நான்காவது தொடர் இந்த ஆண்டு ஜனவரி 9 தொடங்கி பிப்ரவரி 5 வரை நடைபெற்றது. மும்பை இரண்டு முறையும், பெங்களூரு ஒரு முறையையும் கோப்பையை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. கிரிக்கெட் இரசிகர்களின் பார்வை சமீப காலமாக மகளிர் கிரிக்கெட்டின் பக்கம் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளது. அதற்கு முழுக் காரணம் அவர்களின் ஆட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம். நிறைய போட்டிகளும் விளையாடுகின்றனர். அந்த வகையில் சமீபத்தில் நடந்த ஒருநாள் உலகக்கோப்பைத் தொடரில் இந்திய மகளிர் அணி கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர் நடைபெற்ற இந்த ஆண்டிற்கான மகளிர் ப்ரீமியர் லீக் போட்டியில்

அஷ்லீ கார்ட்னர் தலைமையில் டெல்லி

ஸ்மிருதி மந்தனா தலைமையில் பெங்களூரு

ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையில் மும்பை

ஜெமிமா ரோட்ரிஜஸ் தலைமையில் டெல்லி

மெக் லேனிங் தலைமையில் UP அணி என ஐந்து அணிகள் பங்குபெற்றன.

முதல் சுற்றின் இறுதியில்

அணிகள்	போட்டிகள்	வெற்றி	தோல்வி	புள்ளிகள்
பெங்களூரு (தே)	8	6	2	12
குஜராத் (தே)	8	5	3	10
டெல்லி (தே)	8	4	4	8
மும்பை	8	3	5	6
UP	8	2	6	4

முதல் சுற்றின் முடிவில் நடப்பு சாம்பியன் மும்பை மற்றும் UP வாரியர்ஸ் அணி இரண்டும் வெளியேற்றப்பட்டது. முதல் இடம் பிடித்த பெங்களூரு அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. 2 & 3வது இடம் பிடித்த டெல்லி & UP அணிகள் எலிமினேட்டர் போட்டியில் பங்குபெற்றன.

எலிமினேட்டர்:

வதோராவில் நடைபெற்ற போட்டியில் முதலில் பேட் செய்த UP வாரியர்ஸ் அணி பெத் மூனியின் அரை சதத்துடன் 62* (51), 20 ஓவர் முடிவில் 168 ரன்கள் குவித்தனர். டெல்லி அணியின் சின்லே ஹென்றி சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட்களை கைப்பற்றினார். 169 என்ற இலக்குடன் களம் இறங்கிய டெல்லி அணியின் முதல் வரிசை வீராங்கனைகள் லிஷீலி, ஷபாலி, லாரா & ஜெமிமாவின் அட்டகாசமான ஆட்டத்தினால் 15.4 ஓவரில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தி தொடர்ந்து 4 வது முறையாக டெல்லி அணி இறுதிப்போட்டிக்கு தகுதித் பெற்றது.

ஆட்ட நாயகி- ஜெமிமா - 41(23)

இறுதிப்போட்டி:

ஒரு புறம் மூன்று முறையாக இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவிய டெல்லி அணி. மறுபுறம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி நேரடியாக இறுதிப்போட்டிக்கு வந்து இரண்டாவது முறையாக கோப்பையை வெல்லும் ஆர்வத்துடன் பெங்களூரு அணி.

முதலில் பேட் செய்த டெல்லி அணி சிறப்பான தொடக்கத்துடன் சென்ற போட்டி போலவே முதல் வரிசை வீரர்களின் சீரான பங்களிப்பின் காரணமாக 20 ஓவரில் 203/4 ரன்களை குவித்தனர். அணித் தலைவி ஜெமிமா 57 (37) ரன்களை விளாசினார். 204 என்ற இமாலய இலக்கு, இறுதிப்போட்டி என்றெல்லாம் எண்ண சற்றும் நேரம் கொடுக்காமல் ஸ்மிருதி மந்தனா மற்றும் ஜார்ஜியாவின்

அட்டகாசமான ஆட்டத்தால் பெங்களூரு அணி 19.4 ஓவர்களில் இலக்கை எட்டி இரண்டாவது முறையாக ஸ்மிருதி தலைமையிலான பெங்களூரு அணி கோப்பையை வென்றது. டெல்லியின் கோப்பை கனவு நான்காவது முறையாக நிராகரிக்கப்பட்டது.

ஆட்ட நாயகி- ஸ்மிருதி மந்தனா- 87(41)

தொடர் நாயகி- ஷோபி டிவைன் (UPW): 243 ரன்கள் & 17 விக்கெட்கள்.

<u>பேட்டிங் டாப் 3:</u>

ஸ்மிருதி- 377

ஹர்மன்ப்ரீத்- 342

நாட் சிவர் பர்ன்ட்- 321

பந்துவீச்சு டாப் 3:

ஷோபி டிவைன் – 17

நந்தினி ஷர்மா - 17

நாடின் டீ கிளார்க்- 16

முதல் போட்டியில் இருந்தே அதிரடியாக சுவாரஸ்யங்களுக்குச் சற்றும் குறைவின்றி சிறப்பான தொடராக அமைந்த இந்த WPL ரசிகர்களுக்கு விருந்து மட்டுமல்லாமல் இளம் வீராங்கனைகளுக்குத் தங்கள் தேசத்திற்கான பிரதிநிதியாக ஜொலிக்க ஒரு பாதையை ஏற்படுத்தியுள்ளது என்று தான் குறிப்பிடவேண்டும்.

****

துளிகள்

ரஞ்சி கோப்பையில் முதல் முறையாக கோப்பையை வென்ற ஜம்மு காஷ்மீரின் இறுதிப்போட்டிக்கு முன்பு திடீரென்று தொடக்க வீரர் கஜூரியா காயம் காரணமாக விளையாட முடியாமல் போக, மாற்று வீரராக ஹம்ரான் இக்பால் போட்டிக்கு முந்தைய நாள் இரவு 11.30 விமானம் மூலம் டெல்லி, அங்கிருந்து ஹூப்ளி என காலை 9 மணிக்கு வந்து 9.30 க்கு ஆட்டத்தில் கலந்துகொண்டார். இரண்டாவது இன்னிங்ஸில் இக்பால் 160 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.*

இப்போது விற்பனையில் துடுப்பாட்டம் டி20 சிறப்பிதழ்.

120 பக்கங்கள்

விலை ₹100 புத்தகம் வாங்க – 80566 09320

பனுவல், காமன்போல்க்ஸ் இணையதளங்களிலும் கிடைக்கும்

கடைசிப் பக்கம்

உலகக்கோப்பை சூப்பர் 8 சுற்று வரை முடிந்துவிட்டது. கத்துக்குட்டி அணிகளாகப் பார்க்கப்பட்ட சிறிய அணிகள் திறன்மிகு ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மார்ச்சில் தென்னாப்பிரிக்கா - நியூசிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் - இலங்கை மட்டுமே, ஆடவர் சர்வதேசப் போட்டிகள்.

அதேசமயம் மகளிர் போட்டிகள், பிரீமியர் லீக்கள் என வரிசை கட்டி கிரிக்கெட் காத்திருக்கிறது.

துடுப்பாட்டம் சிறப்பிதழை வாங்கி வாசித்த அனைவருக்கும் நன்றி. பொருநை புத்தகக் கண்காட்சியில் துடுப்பாட்டம் இதழைக் காட்சிப்படுத்திய நெல்லை படைப்பாளர்கள் அரங்கம், குமிழ்முனை மற்றும் சுட்டி யானை அரங்கங்களுங்கு நெஞ்சார்ந்த நன்றி. அதற்கு உதவிய நண்பர் சேதுபாலாவிற்கும் நன்றிகள்.

Mail – thuduppattam7@gmail.com

X - @thuduppattam

www.thuduppattam.blogspot.com

Whatsapp - +91 80566 09320